விலை: 30.00
பக்கங்கள் : 12+12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 049 வள்ளுவர் ஆண்டு 2053 தை 24 ஞாயிற்றுக்கிழமை (06.02.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamala.jaffna@gmail.com
1500/= + 500/=



## நாட்டை முடக்க தயாரில்லை

### இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன



(கொழும்பு)

நாட்டை முடக்குவதற்கோ அல்லது பயணக் கட்டுப்பாடுகளை விதிப்பதற்கோ அரசாங்கம் தயாராக இல்லை என இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

( 11ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய மீனவர்களது விவகாரம் இராஜதந்திர ரீதியிலான பிரச்சினை

### கடற்படை பேச்சாளர் கப்டன் இந்திக டி சில்வா



(கொழும்பு)

இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறும் விவகாரம் இராஜதந்திர ரீதியிலான பிரச்சினை என இலங்கை கடற்படை பேச்சாளர் கப்டன் இந்திக டி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களைக் கண்டித்தும், வடமராட்சி கிழக்கு மீனவர்கள் இருவர் உயிரிழந்த சம்பவத்திற்கு நீதி 11

### மாவடி மூளாயில்

## வீடு புகுந்து நகை திருட்டு

(அராலி)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாவடி - மூளாய் வீதிப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் நேற்று பகல் தங்க நகைகள் 11

### வயலில் வேலை செய்த இளைஞன்

## திடீரென மயங்கி விழுந்து உயிரிழப்பு



### கரவெட்டியில் சம்பவம்

(கரணவாய்)

வயலில் வேலை செய்து கொண்டிருந்த இளைஞர் ஒருவர் திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

கரவெட்டி விக்கினேஸ்வரா கல்லூரிக்கு முன்பாக உள்ள வயலில் நேற்று 11

### மூவின மக்களையும்

# ஜனாதிபதி தொடர்ந்து ஏமாற்றி வருகின்றார்

### கோட்டாவின் சுதந்திர தின உரை தொடர்பில் சம்பந்தன், சஜித், அநுர கூட்டாகத் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தமிழ், முஸ்லிம் மக்களை மட்டுமன்றி தன்னை அரியணை ஏற்றிய சிங்கள மக்களையும் தொடர்ந்து ஏமாற்றி வருகின்றார். இம்முறை அவர் ஆற்றிய சுதந்திர தின உரை இதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், ஜே.வி.பி தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் கூட்டாக தெரிவித்துள்ளனர்.

( 11ஆம் பக்கம் பார்க்க)

## வீடு தேடிவரும் பூஸ்டர் தடுப்பூசி

### சுகாதார அமைச்சு

(கொழும்பு)

வீடுகளுக்கே சென்று பூஸ்டர் தடுப்பூசியை செலுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் இந்த நடமா 11

### ஒரு வயது குழந்தை உட்பட

## யாழில் 22 பேருக்கு கோவிட் தொற்று

(யாழ்ப்பாணம்)

ஒரு வயது ஆண் குழந்தை உட்பட யாழில் 22 பேருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையா 11

## கொரோனா 28 பேர் பலி

(கொழும்பு)

கோவிட் தொற்றுக்குள்ளான மேலும் 28 பேர் உயிரிழந்துள் 11

## அரசியல்வாதிகளின் விருப்பத்துக்கிணங்க சிறைக் கைதிகளை விடுவிக்கவே முடியாது

### பிரதமர் மகிந்த தெரிவிப்பு



(கொழும்பு)

அரசியல்வாதிகளின் தேவைக்கேற்ப சிறைத் தண்டனை அனுபவித்துவரும் கைதிகளை விடுவிக்க முடியாது. அதற்கான நடைமுறைகள் உள்ளன என பிரதமர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

இலங்கையின் 74ஆவது சுதந்திர தினத்தன்று ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் 11

## நாட்டில் மேலும் +1,287 பேருக்கு தொற்று

(கொழும்பு)

கொரோனாத் தொற்று உறுதியான 11

## மீனவர்களின் போராட்டத்திற்கு தீர்வு எட்டப்பட்டுள்ளது

### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மீனவர்களின் போராட்டத்திற்கு சுமுகமான தீர்வு எட்டப்பட்டுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

தேசிய மீனவர் சம்மேளனத்தின் பணிப்பாளர் சபை கூட்டம் நேற்று நடை 11

## எல்லேவலயில் நீராடச் சென்ற

### 3 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

வெல்லவாய - எல்லேவல நீர்வீழ்ச்சியில் நீராடச் சென்ற 3 பேர், நீரில் 11

## இருப்பதை இழக்காமல் முன்னோக்கி நகர்வோம்

### மனோ எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை நாம் முழுமையான தீர்வாக ஏற்கவில்லை. அதனை வைத்துக் கொண்டு முன்னோக்கி 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## மணமகன் தேவை

யாழிந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976 ஆம் ஆண்டு பிறந்த குடும்பப்பாங்கான ஆசிரியையாக கடமை புரியும் மணமகளிற்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (10055)

☎-070 640 5951
e-mail : engchelvam@gmail.com



## காணி விற்பனைக்கு

ஸ்ரான்லி வீதியில்
(ஆரியகுளத்திற்கு அருகாமையில்)
2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-
076 972 7027 (10066)


# கொழும்பில் சடலங்கள் மீட்பு

கொழும்பில் தமிழர்கள் அதிகம் வசிக்கும் வெள்ளவத்தையிலிருந்து இரண்டு ஆண்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக வெள்ளவத்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சடலங்கள் அடையாளம் காணப்படாத நிலையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ம)


## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால் IELTS, $A_1$ UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH

❖ Guaranteed to 7.5 in IELTS Exam.
❖ Pass in UK $A_1$ Exam.
❖ Exam Registration center.

வகுப்புக்கள் குழுவாகவும் தனியாகவும் கற்பிக்கப்படும்.
OXFORD ENGLISH ACADEMY,
Ariyakulam junction, Jaffna. (9300)

TP : 077 780 3970, 074 007 1970



## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த விவாகரத்துப் பெற்ற MBBS Dr.க்கு 35 - 45 வயதுக்கிடைப்பட்ட மணப்பெண் தேவை. பிறந்த ஆண்டு 1964 (10064)

077 918 4563,
021 225 2039



## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா?

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்புகூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

குளிசை பால்மா என்பன விற்பனைக்குண்டு

## கருமை நிறம் நீங்க வேண்டுமா?

கருமை நிறம், கரும்புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக்கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம், காய்கள் (பாலுண்ணி) அகற்றும் கிறீம், முகத்தில் உள்ள தேவையற்ற ரோமம் அகற்றும் கிறீம் என்பன விற்பனைக்கு உண்டு.

பாவித்து 15 நாட்களில் அற்புதமான அழகைக் காண்பீர்கள் (10071)

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.


# முக்கிய அறிவித்தல்

எமது நிறுவனத்தில் கடந்த மூன்று மாதங்களாக உதவி மருந்தாளராக கடமையாற்றிய **ஜெநகன் கேசவமூர்த்தி** (NIC 198323000985) என்பவர் **03.01.2022**ஆம் திகதி முதல் எமது நிறுவனத்திலிருந்து பதவி விலகியுள்ளார்.

இவர் இனிவரும் காலங்களில் எமது நிறுவனத்தின் பெயரில் செய்யப்படும் பணக்கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் விளம்பரப்படுத்தல் விற்பனை தொடர்பான எந்தவிதமான செயற்பாடுகளுக்கும் எமது நிறுவனம் பொறுப்பேற்கமாட்டாது என்பதனை அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

**தகவல்: முகாமைத்துவம்**
**STS Hospital**
**130, 1st Cross Street, Jaffna.**
**021 222 6600, 021 222 6611**
(C-3712)

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியை
திருமதி **கௌரி யோகேந்திரன் (BA)**
அவர்களின் பாசமிகு மாமியார்

## திருமதி நாராணயசாமி தவமணி

அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/கல்வியங்காடு**
**இந்து தமிழ்க் கலவன் பாடசாலை**
(C-3713)

# மரண அறிவித்தல்



செல்வி
## குணரத்தினம் கணபதிப்பிள்ளை

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 03.04.1942 | 03.02.2022 |

மானிப்பாய் வீதி ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்வி குணரத்தினம் கணபதிப்பிள்ளை கடந்த 03.02.2022 (வியாழக்கிழமை) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - தங்கம்மா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை (முன்னாள் கிராமசபை உறுப்பினர், உரிமையாளர் - குட்லக் சைக்கிள் வேர்க்ஸ்), கனகம்மா ஆகியோரின் அருமைச் சகோதரியும் காலஞ்சென்ற சின்னராசா மற்றும் மகேஸ்வரி ஆகியோரின் அருமை மைத்துனியும் காலஞ்சென்றவர்களான ஜீவமலர், ஜீவகுமார், விஜயமலர் மற்றும் சிறிதரன் (உரிமையாளர் - சிறி அம்பாள் எலக்றிக்கல்ஸ் அன்ட் வெல்டேர்ஸ்), உமாராணி, ரவிக்குமார் ஆகியோரின் பாசமிகு சிறிய தாயாரும் சத்தியானந்ததேவி (ஓய்வுநிலை ஆசிரியை), ரேவதி, சாந்தா, சுதேந்திரன், குணேந்திரன் ஆகியோரின் அருமை மாமியாரும் சிறிஸ்கந்தவேள், ரவீந்திரநாதன், தயாசக்தி (விதினி), காலஞ்சென்ற ரவீந்திரன் மற்றும் சுகிர்தரஞ்சன், றஜித்தா, ஜெனற் றஜனி ஆகியோரின் அருமை அன்ரியும் வேதிகா, கார்த்திகா, கீர்த்திகா, கௌதமன், ராகுலன், ஆரூரன், யாதவன், துளசி, ஆரபி, ராகவி, ஆகாஷ், துவாரகன், சாகித்தியன், திலோத்தமன், பூர்விகா ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் வைஷ்ணவி, ஸ்வாகா, ருத்திரன், ஆதிரா, றெமோ, நிஸ்வின் ஆகியோரின் அருமைப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06.02.2022) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக எருக்கலம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மானிப்பாய் வீதி,**
**ஆனைக்கோட்டை.**

*தகவல் : சி.சிறிதரன்*
**உரிமையாளர் - சிறி அம்பாள் எலக்றிக்கல்ஸ் அன்ட் வெல்டேர்ஸ்**
**021 221 3203, 077 659 5256**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## செல்லத்துரை தங்கராஜா



கொழும்புத்துறை, AV றோட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை தங்கராஜா நேற்று முன்தினம் (04.02.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - பூரணம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற நல்லதம்பி - சௌந்தரம் தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற குமாரதேவியின் பாசமிகு கணவரும் ஷியாம், சுபாஸ், அபர்ணா ஆகியோரின் அன்புத் தந்தையும் தாரணி, யுகேந்திரா ஆகியோரின் அன்பு மாமனும் யாக்ஷாவின் அன்புப் பேரனும் லீலா, துரைமணி, பவளராஜா, பாஸ்கர், காலஞ்சென்றவர்களான ராசா, ரகு மற்றும் சிவகுமார் (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சறோ, ரத்தினேஸ்வரி, ராஜி, சகிலா, சாந்தி (அமெரிக்கா), ரதி, ஜெயராசா (டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06.02.2022) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்று நல்லடக்கத்திற்காக பிற்பகல் 2.00 மணியளவில் காரைநகர் தென்னிந்திய திருச்சபை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

AV றோட்,
கொழும்புத்துறை

தகவல்: குடும்பத்தினர்
077 468 4782

(10075)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்.திருமதி

## சிவபாதசுந்தரம் விஜயலட்சுமி

தோற்றம் 17.04.1957

மறைவு 07.01.2022

கடந்த 07.01.2022 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி அமரர் திருமதி.சிவபாதசுந்தரம் விஜயலட்சுமி அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை 06.02.2022 முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

1010/30,கே.கே.எஸ்.வீதி,
[illegible] லேன்,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

076 541 5018

குடும்பத்தினர்.

(9975)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொற்றாளர்கள் அதிகரிப்பு

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

ஒமிக்ரோன் தொற்றுடன் ஒட்சிஜனை சார்ந்துள்ள கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை 4 முதல் 5 வீதம் வரை அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொரோனா தொற்று காரணமாக அதிதீவிர சிகிச்சைப் பிரிவுகளில் அனுமதிக்கப்படும் நோயாளிகளின் எண்ணிக்கையும் அதேயளவு அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சின்தொழில்நுட்ப சேவைப்பிரிவு பணிப்பாளர் மற்றும் கொரோனா ஒருங்கிணைப்பு அதிகாரி, மருத்துவர் அன்வர் ஹம்தானி தெரிவித்தார்.

நோயாளிகள் பதிவாகும் வீதத்தை கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில், இந்த வாரம் 30 வீத அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் மரணங்களின்எண்ணிக்கை 10 வீதம் அதிகரித்துள்ளதாகவும் மருத்துவர் அன்வர் ஹம்தானி சுட்டிக்காட்டினார். (ம)




*Sri Mahakaliamman Devasthanam, Valaithoddam, Iyakkachchi Temple Trust*

**ஆலய நிர்வாக உத்தியோகத்தர்**

இயக்கச்சியில் அமைந்துள்ள ஶ்ரீ மகா காளியம்மன் ஆலயத்துக்கு இந்து மதத்தை சேர்ந்த , ஆலய வழிபாடுகளில்ஈடுபாடுள்ள, சமூகசேவை மனப்பான்மையுள்ள நிர்வாக உத்தியோகத்தர் தேவை .

ஆண்,பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

ஆலயத்தை அறங்காவலர் சபையின் வழி காடடலுக்கேற்ப நிர்வகித்து நித்திய பூசைகளை குறிப்பிடட நேரத்திற்குநடாத்தி ஆலய உற்சவங்களையும், சிறப்பு பூசைகள் ஆகியவற்றையும் ஆகம முறைப்படி நடை பெறுவதை உறுதி செய்வதும் பிரதான கடமைகளாகும்.

ஆலய செயற்பாட்டுக்கு தேவையான முழு நிர்வாகத்தையும் பொறுப்புடன் ஏற்று செயற்படுவது இப் பதவிக்குதேர்ந்தெடுக்கபடும் நபரின் கடமையாகும்.

ஆலயத்தின் அண்மித்த பகுதியில் வாழும் மக்களின் சமய சமூக கல்வி மேம்பாட்டுக்கு உதவுவதும் இந்தநிலைக்குரிய பணியாகும்.

ஆலயம் அமைந்துள்ள அண்மித்த பகுதியிலிருந்து கிடைக்கும் விண்ணப்பங்களுக்கு முன்னுரிமைவழங்கப்படினும் , மற்றைய பிரதேசங்களிலிருந்து கிடைப்பவையும் சமமாக பரிசீலிக்கப்படும்.

ஆலயத்தோடு மிகுந்த ஈடுபாடுள்ள ,தேர்ந்தெடுக்கப்படும் நபருக்கு தகுந்த ஊதியமும் வழங்கப்படும் . (C-1620)

தொடர்பு கொள்ளவும் :
மின்னஞ்சல் : sr@isfindustries.com
தொலைபேசி : 0772078455
தபாலில் : 3/4 , Rockwood Place ,Colombo 07

QUICK ADS

**Happy Supermarket**
உரும்பிராய்

**வேலைக்கு ஆட்கள் தேவை**

Full Time

- **Salesman** வயது: 20 - 28
- **Data entry Operator - பெண்கள்** எதிர்பார்ப்பு - Ms Office, GRN Entry, வயது 19 - 28
- **Cashier பெண்கள்** எதிர்பார்ப்பு:- A/L Pass வயது: 19 - 26
- **Cleaning - பெண்கள்**

(C-3716)

உரும்பிராய்

**077 350 4700**



**சாவகச்சேரி மக்களே !**
**உங்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி.**

**புளோரன்ஸ் நைற்றிங்கேல் தாதியர் பயிற்சிப் பாடசாலை தனது அடுத்த கிளையை சாவகச்சேரியில் வெற்றிகரமாக ஆரம்பித்துள்ளது.**

புதிய மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

**முந்திக்கொள்ளும் முதல் 10 பேருக்கு அனுமதி கட்டணம் குறைக்கப்படும்.**

- ஒரு வருட பயிற்சியின் பின் தனியார் வைத்தியசாலையில் வேலை வாய்ப்புக்கள் பெற்றுத் தரப்படும்.
- அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

**அனுமதிகளை பெற்றுக்கொள்ள எங்களுடன் இணைந்து கொள்ளுங்கள்.**

கடமை நேரம் : 9.00 - 3.00 மணிவரை
முகவரி : சிவன் கோவில் வீதி, சாவகச்சேரி
(சாவகச்சேரி மெடிகெயார் வைத்தியசாலைக்கு அருகில்)

**தொடர்புகளுக்கு : 077 718 6438, 021 492 8916**

(10067)


# மரண அறிவித்தல்

## திருமதி குணரத்தினம் தனநாயகி



இராஜகாரியர் வீதி, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் உடுவில் றோட், வடலித்தோட்டம், மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குணரத்தினம் தனநாயகி நேற்று முன்தினம் (04.02.2022) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - தனலட்சுமி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற சரவணமுத்து - லட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் குணரத்தினத்தின் பாசமிகு மனைவியும் பத்மகுணராஜா, ரட்ணகுமார், கஜந்தினி ஆகியோரின் அன்புத் தாயாரும் தர்மநாயகி (கொழும்பு), கருணாநிதி, சிவகுமார், உதயகுமார் (லண்டன்), உதயநாயகி (லண்டன்) மற்றும் காலஞ்சென்ற செல்வநாயகியின் அன்புச் சகோதரியும் ஞானமுத்து, காலஞ்சென்ற அரசலிங்கம், மாரிமுத்து, அன்னபூரணம், அன்னம்மா, நல்லமுத்து, செவ்வந்தி ஆகியோரின் மைத்துனியும் திலகேஸ்வரி, சோபியா, மோகனதாஸ் ஆகியோரின் அன்பு மாமியாரும் யசிகரன், ஜெசிந்தினி, மதீசன், ஷாருஜன், லிதுஷா, சகித்தன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06.02.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உடுவில் றோட்,
வடலித்தோட்டம், மானிப்பாய்.

(10074)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதகல் நுணசை கூடல்விளாத்தி அருள்மிகு
## சாந்தநாயகி அம்பிகா சமேத ஸ்ரீசந்திர மௌலீஸ்வர சுவாமி தேவஸ்தானம்
## புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட சிறப்பிதழ் - 06.02.2022

### ஆசிச்செய்தி



ஆதியும் அந்தமும் இல்லாத எம்பெருமான் தேரில் ஆரோகணித்து வீதியுலா வந்து அடியவர்களின் மனக்குறைகளைத் தீர்த்து திருவருட் கடாட்சம் வழங்கும் நிகழ்வு தெய்வீகச் சிறப்பு வாய்ந்தது. ஊர் கூடி வடம் பிடித்து தேர் இழுப்பது என்பது கிராமத்துக்கு மட்டுமல்ல நாட்டுக்கே நல்லதாக அமைந்துள்ளது. இந்து மக்களது நிதியுதவியாலும் ஒத்துழைப்பினாலும் சிற்பக் கலைஞர்களது கை வண்ணத்தினாலும் புதிதாக வடிவமைக்கப்பட்ட சித்திரத் தேரரின் வெள்ளோட்டப் பெருவிழா சிறப்பாக அமைய வேண்டும் என்பதுடன் ஆலய திருப்பணிச் சபையினரின் முழுமையான ஆதரவுடன் ஆலயம் மேலும் வளர்ச்சியடைய எம் பெருமான் திருவருள் கிடைக்க வேண்டும் எனவும் ஆசி கூறி பிரார்த்திக்கின்றோம்.

**என்றும் வேண்டும் இன்ப அன்பு**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த**
**பரமாச்சார்ய சுவாமிகள்.**

### ஆசிச்செய்தி



தன்னை நாடி தேடி ஓடி வரும் அடியவர்களின் துயர் களைந்து அருள்பாலித்திருக்கும் இறைவன் சாந்தநாயகி சமேத சந்திரமௌலீஸ்வரர் எனும் நாமம் தாங்கி அருளாட்சி புரிந்து வரும் எம் சிவபெருமானுக்கு ஆலய திருப்பணிச்சபை பொருளாளர் தி.வி.சிற்றம்பலம் அவர்களின் பெரும் முயற்சியாலும் சிற்பக்கலைமாமணி திரு.செல்லத்துரை சக்திவேல் ஸ்தபதி அவர்களின் வழிகாட்டலில் ஆச்சாரியார் திரு.மாசிலாமணி குகப்பிரகாசம் (குகம்) அவர்களின் தலைமையில் புதிய சித்திரத் தேர் வடிவமைக்கப்பெற்று 06.02.2022 வெள்ளோட்டமும் 16.02.2022 ரதோற்சவம் காணும் இவ்வேளையிலே உள்ளம் இறும்பூதெய்தி நல்லாசிகள் கூறி வாழ்த்துகின றோம்.

சிற்பாசிரியர்கள், திருப்பணி சபையினர், பொருளுதவியும் பணவுதவியும் செய்த எம்பெருமானின் சிவனடியார்கள் எல்லோருக்கும் சாந்தநாயகி சமேத சந்திர மௌலீஸ்வர பெருமானின் பேரருள் என்றென்றும் குறைவின்றி கிடைக்கப் பிரார்த்தித்து எனது தாய், தந்தை சுப்பையர் இரத்தினஜயர் மனோன்மணி அவர்களினதும் எம் தாயாரின் தந்தை பரமசாமிக்குருக்கள் அப்பாசாமிக்குருக்கள் அவர்தம் சகோதரர்களான பரமாசாயிக்குருக்கள், நடராசக் குருக்கள், பரமா சாயிக் குருக்கள், வேதக் குட்டிக்குருக்கள் ஆகியோரின் விண்ணுலக ஆசிகளோடு சிறப்பாக நடைபெற பிரார்த்தித்து நல்லாசிகள் கூறுகின்றேன்.

**இ.மாணிக்கவாசகக் குருக்கள்**
**ஆதீன கர்த்தா மாதகல் நுணசை-கூடல் விளாத்தி.**

### எம்பெருமானுக்கு புதிய சித்திரத்தேர்



தன்னை நாடி வர முடியாத அன்பர்க்காய் அவர் தாமும் ஈடேற்றம் பெற வேண்டும் என்பதாய் சாந்த நாயகிசமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலயம்போன்றே திராவிட சிற்பசாஸ்திர நெறிமுறைகளோடு அமைக்கப்பெற்ற தேரிலே ஆரோஹணித்து, ஆலயத்தின் அசையும் வடிவமே "தேர்" என்றும் நான்முகனே அதன் சாரதியென்றும் பல உயர்ந்த வாழ்வியல் நெறிமுறைகளை உணர்த்தும் தமிழர் தம் கலை அறிவியல் வடிவாய் இத்தேர் மிளிர்கின்றது. இத்தேரினை சிற்பசாஸ்திர முறைப்படி ஆதவன் கலைக் கூடத்தின் சிற்பக்கலைமாமணி திரு.செல்லத்துரை சக்திவேல் ஸ்தபதி அவர்களின் வழிகாட்டலில் ஆச்சாரியார் திரு.மாசிலாமணி குகப்பிரகாசம் அவர்களின் தலைமையில் ஆச்சாரியர்களான திரு.செ.செந்தில்நாதன், திரு. மா.மகேஸ்வரன், திரு.கு.ரவிராஜ், திரு.குணதா சன், திரு.டிலக்ஷன், இரும்பு வேலைகள் திரு.க.அருள்நேசன், திரு.து.சதீஸ் குழுவினர்கள், வர்ணப்பூச்சு வேலைகள் திரு.அ.அஜந்தன் (இத்தா) குழுவினர் திரு.ம.கண்ணன், திரு.செ.கருணா இன்னும் பல உதவியாளர்கள் இணைந்து பூசாந்திர சித்திரத் தேரை உருவாக்கியுள்ளனர்.

இவர்கள் அனைவருக்கும் மற்றும் இத்தேரினை உருவாக்க முழுமுயற்சி எடுத்த எமது ஆலய திருப்பணிசபை பொருளாளர் திரு.வி.சிற்றம்பலம் அவர்களுக்கும் மற்றும் கனடா வாழ் திரு.ந.கணேசமூர்த்தி அவர்களுக்கும் நிதியுதவியளித்த சிவனடியார்கள் அனைவருக்கும் எம்பெருமானின் பரிபூரண திருவருள் கிடைக்க பிரார்த்தித்து நல்லாசிகளும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாணிக்கசிவப்பிரியக் குருக்கள்**
**ஆதீன இளவரசு ஆலய குரு.**

சிவபூமி என்று சிறப்பித்துப் போற்றப்படும் இலங்கைத் திருநாட்டின் வட மாநிலத்திலுள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டில் இயற்கை வளம் நிறைந்த புண்ணிய பூமியான மாதகல் நுணசை கூடல் விளாத்தி பகுதியில் கோவில் கொண்டு எழுந்தருளி இருக்கும் அருள்மிகு சாந்த நாயகி அம்பிகா சமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர சுவாமிக்கு புதிதாக வடிவமைக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா இன்று (06.02.2022) காலை 8.00 மணிக்கு நடைபெறுகிறது.

**வருடாந்த மாசிமக மஹோற்சவப் பெருவிழா**

கொடியேற்றம்: 08.02.2022 செவ்வாய்க்கிழமை

கைலாச வாகனம்: 13.02.2022 ஞாயிற்றுக்கிழமை.

திருமஞ்சம்: 14.02.2022 திங்கட்கிழமை.

வேட்டைத் திருவிழா, சப்பறம்: 15.02.2022 செவ்வாய்க்கிழமை.

இரதோற்சவம்: 16.02.2022 புதன்கிழமை.

தீர்த்தோற்சவம்: 17.02.2022 வியாழக்கிழமை

**ஆலய வரலாற்றிலிருந்து சில துளிகள்**

இந்த ஆலயம் நூறு ஆண்டு காலத்திற்கும் மேலான வரலாற்றுப் பெருமை கொண்டது. தங்களது குலதெய்வ, குடும்ப வழிபாட்டுக்காக இங்குள்ள அந்தணப் பெருமக்களால் ஸ்தாபிக்கப்பட்டது இந்த ஆலயம். காலப்போக்கில் இங்குள்ள சைவப் பெருமக்கள் பலர் தாங்களும் வழிபாடு செய்ய விருப்பம் கொண்டனர். கிராமத்து அடியார்களின் வேண்டுகோளை நிறைவேற்றும் வகையில் அந்தணப் பெருமக்கள் அதற்கான வசதிகளையும் ஏற்பாடுகளையும் செய்து கொடுத்தனர். கிராமத்து அடியார்கள் ஆலய வளர்ச்சியில் பெரிதும் அக்கறை கொண்டு செயற்பட்டனர். 2011 ஆம் ஆண்டு ஆலய ஆதீன கர்த்தாவான பிரதமகுரு அவர்களது தலைமையில் திருப்பணிச்சபையொன்று அமைக்கப்பட்டது. அடியார்கள் பலர் ஒன்றிணைந்து தங்களது முழுமையான ஒத்துழைப்பையும் உதவியையும் வழங்கி வருவதன் ஊடாக ஆலயம் வளர்ச்சி பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

### ஆசியுரை



நித்திய பூஜைகளில் ஏற்படக்கூடிய குறைபாடுகளைக் களைந்து இறை சாந்நித்தியத்தை அதிகரிப்பதற்கு மஹோற்சவம் உதவுகிறது. மஹோற்சவத்தின் முக்கியமான ஓர் அங்கம் இரதோற்சவம் என்னும் தேர்த்திருவிழா ஆகும். தேவோப சாரம், ராஜபசாரம் என்ற வகையில் இறைவனைத் தேரில் ஏற்றி அடியவர்கள் யாவரும் கூடி இருந்துவரும் பக்தி உணர்வானது ஆன்ம ஈடேற்றத்தில் லௌகிக வாழ்வின் சிறப்புக்கும் உதவும் என்பது ஆகம விளக்கமாகும்.

கலைநயத்துடன் கூடிய சித்திரத்தேரை உருவாக்குவது நமது நாட்டு சிற்பக் கலைஞர்களின் பெருமையை உலகெங்கும் பறைசாற்றி நிற்பதாகும். தேரின் சிற்பக் கலைவண்ணமும் அது இறைவனைச் சுமந்தவாறு ஆடி அசைந்து வரும் அழகும் கண்கொள்ளாக் காட்சியாகும். மாதகல் -நுணசை கூடல் விளாத்தி என்னும் தலத்தில் வீற்றிருக்கும் அருள்மிகு சாந்த நாயகி அம்பிகா சமேத ஸ்ரீ சந்திரமௌலீஸ்வர சுவாமிக்கு இவ்வருடம் புதிய சித்திரத்தேரை உருவாக்கி வெள்ளோட்டம் செய்கிறார்கள். அருமையான இந்த முயற்சியில் ஈடுபட்ட ஆலய ஆதீனகர்த்தாக்கள், சிற்பாசிரியர்கள், பொருளுதவி புரிந்த வள்ளல்கள், அடிபணிந்து வடம் பிடிக்கும் அடியார்கள் அனைவருக்கும் எனது நல்லாசிகளைத் தெரி[illegible]ன்.

**சிவஸ்ரீ தா.மஹாதேவக் குருக்கள்,**
**தர்மசாஸ்தா குருகுலம், இணுவில், கோண்டாவில்.**

### ஆசிச்செய்தி



அருள்வளம் நிறைந்த மாதகல் திருவூரில் அருள்பாலிக்கும் நுணசை கூடல் விளாத்தி ஸ்ரீசாந்த நாயகி அம்பிகா சமேத ஸ்ரீ சந்திரமௌலீஸ்வரப் பெருமானுக்கு புதிய சித்திரத்தேர் அமைக்கப்பட்டு வெள்ளோட்ட விழா நடைபெறுவது அறிந்து மிகவும் ஆனந்தமடைகிறேன்.

இயற்கை வளம் நிறைந்த மாதகலில் சிவனாருக்கு அழகான சித்திரத்தேரை உருவாக்கிய சிற்பக் கலைஞர் திரு.மா.குகப்பிரகாசம் அவர்களின் உன்னத பணி கண்டு பெருமை கொள்கிறோம். திருத்தேர் உருவாக்கத்துக்கு காணிக்கை வழங்கிய அடியவர்களுக்கு நல்லருள் நிறைவாகக் கிடைக்க நாமும் பிரார்த்திக்கிறோம். அற்புதத் தேரில் எம்பெருமான் எழுந்து வந்து எங்கும் அறம் நிலைக்க அருள்பாலிக்க வேண்டிப் பிரார்த்திக்கின்றோம். ஆலயத்தை சீரிய முறையில் காக்கும் அறங்காவலர்கள், சிவச்சாரியர்கள், அடியவர்களின் கூட்டு முயற்சி மேலும் தொடர வேண்டி எனது இதயபூர்வமான வாழ்த்துகளையும் நல்லாசிகளையும் சமர்ப்பித்து நிற்கிறோம்.

**கலாநிதி.ஆறு.திருமுருகன்**
**தலைவர் ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.**
**தலைவர் சிவபூமி அறக்கட்டளை, இலங்கை.**

### தேரேறிய சங்கரர் துதி



போ ரொத்த வெண்மதியம் சூடிப் பொலித் திலங்க வேழத்து உரிபோர்த்தான் வெள்வளையாள் தான் வெருவ ஊழித்தீ அன்னானை ஓங் கொலி மாப்பூண்ட தோர் ஆழித்தேர் வித்தகனை நான் கண்டது ஆரூயிரே!

ஆயைத் திருவிழாவில் இறைவன் தேர் மீது எழுந்தருளி வீதிவலம் வருவது மிகச்சிறந்த வழிபாட்டிற்கு உரியதாகும். இறைவன் தேரில் வருவது துஷ்டர்களை மாய்த்து சிஷ்டர்களைக் காக்கும் ஸம்ஹார அனுக்ரஹ செயல்களை உணர்த்தும் திருக்காட்சியாகும். தேரின் வடிவமைப்பு அண்டத்திற்கும் பிண்டத்திற்கும் சமனாகும். விசுவவிராட் சொரூபமே தேரின் எட்டு அடுக்குகளாகும். அவை மேலிருந்து முறையே கலசம் சிவசக்தி, கும்பம் (சிகரம்) ஷோட சாந்த ஸ்தானம் அடுத்த கீழ் அடுக்கு துவாதசாந்தம், அடுத்து மஸ்தக அதிஷ்டானம் அடுத்து புருவமத்தியஸ்தானம், நடுவில் தாங்கிடும் குத்துக்கால்கள் தத்துவமாகும் தூண்கள்முன் மூன்று துறைகள், மூன்று கண்கள், பின்னவை சிகையும், இடவலக்காதுகள் என்பவையாம்.

இறைவன் அமர்ந்துள்ள கேடயபீடம் முப்பாழ் மண்டல சூரிய சந்திர கலைகள் சாரதி அக்னிக் கலை இவை நாசியாகும். அடுத்த அடுக்கு கண்டஸ்தானம், அதையடுத்த அடுக்கு இருதய ஸ்தானம், அதையடுத்த அடுக்கு நாவி, அதற்கு அடுத்த அடுக்கு குண்டலிஸ்தானம், பத்துசக்கர மூலம் பத்து வகை வாயுக்கள். இவைக்கு கர்த்தா இறைவன் இவ்வாறு அமைந்த பிண்டவ சரீரமாகிய தேரில் தக வாயுக்களாகிய சக்கரங்களை நிறுத்தி, அசைவற்ற மனதை ஊந்தி குண்டலியில் இருந்து நாவுக்கும் அகிலிருந்து கழுத்துக்கும், அதிலிருந்து வாய்க்கும் ஏற்றி இதயப்படுத்தி முறையே இதர குதிரையாம் நாசிக்கும், அங்கிருந்து கண் வழியாகவும் நடுவழியாக மேல் நோக்கி ஆறாம் அடுக்காகிய புருவ நடுவிற்கு (ஆக்ஞைசக்ரம்) ஏற்றிலயப்பட்டு, சும்மா இருந்த படி இருக்கும் நித்திய சுயியாய் இருந்திடல் வேண்டும் என்ற இத்தகைய இலக்கியக் கிராமத்தைக் காட்டுவதே திருத்தேர் விழாவாம். மேலும் மும்மலமான முப்புராசுரர்களை சிரித்தெரித்து சிவன் ஆன்மகோடிகளைக் காப்பாற்றிய பாதுகாப்புத் தொழிலை உணர்த்துவதே தேரோட்டமாம். ஆன்மலயத்தால் சிவ போகம் எய்த விளைவதே தேரோட்ட திருவிழாவாகும். இதனை ஞானசம்பந்தர் மூவர் புறங்கள் எரித்த அன்று மூவர் கரு செய்தார் என்றும் தொடுத்தாற்குரம் மூன்று எரிய சிலை மேல் ஏரி ஒன்பக்கழியார் என்றும் நாவுக்கரசர் திருபுலங்கள் துவலயத்தின் சிலைகை கொண்ட போரான் என்றும் அருணகிரிநாதர் முப்பெரும் எரி செய்த அச்சிவன் உரைரதம் என்றும் கூறுவர். இரதோற்சவம் சிவத்தன்மை எனும் எட்டுக் குணங்கள் ஆன்மாவிற்கு விளங்குதல் பொருட்டு நடாத்தப்படுவதாம் அவை. 1. சர்வக்ஞத்வம், 2. நித்யதிருப்தி, 3. அனாதிபோதம், 4. சுதந்திரத்வம், 5. அலுப்தசக்தி, 6. அனந்த சக்தி, 7. நிராமயான்மா, 8. விசுத்தேகம் என்பன இறையருளால் விளைவிக்கப்படும் அருட்பேறு குணங்களாகும். இதனைத் தேர் உணர்த்துகிறது.

சிறப்பான முறையில் வெள்ளோட்டம் நடைபெற இறைவன் பிரார்த்தித்து ஆலய அதீன கர்த்தாவிற்கும் இளவரசிற்கும் தேரினை திறம்படச் செய்த சிற்பாச்சாரியார்களுக்கும் அனைத்து நல்லுள்ளங்களுக்கும் மெய்த்திருவருள் கிடைக்க பிரார்த்திக்கின்றோம்.!

**சிவகாம ரத்னா ப்ரம்மஸ்ரீ பரமேஸ்வரஜங்கர சர்மா M.A, ஸ்தாபகர், அதிபர்.**

With Best Compliments From.....!
**நகுலேஸ்**
NAKULESH HARDWARE ஹாட்வெயர்
pepsi Distributors
சித்தங்கேணி வீதி, பண்டத்தரிப்பு. தொ.பே : 077 717 4445

**ஸ்ரீ ராஜேஸ்வரி களஞ்சியம்**
(மருந்துக்கடை)
SRI RAJESHWARY STORES
அனைத்துவித பூஜைகளுக்குமான தரமானஉபகரணங்கள், திரவியங்களும், சுவாமி வேஷ்டிகள், சேலை, அம்மன் பட்டு, பாவாடை மற்றும் குருக்கள் தலப்பா, உத்தரியம், அலங்கார கூர்ச்சம், பவித்திரம் ஆகியவற்றை பெற்றுக் கொள்ள கைராசியான களஞ்சியம்
021 224 4665 077 284 0408 071 477 4000
மானிப்பாய் வீதி, மருதனார் மடம்

**Eagle Car Wash Lanka (pvt LTD)**

Kodikamam Road, Nelliady
TP : 0771492439

**C.K. Paint Shop**
No19 Main Street Pandatharippu
உலகத்தரம் வாய்ந்த பெயின்ட் வகைகளாகிய Asian paint, Causeway paint களின் சகல விதமான நிறங்களை
asianpaints CAUSEWAY
TP : 077 266 6051
077 903 7690
(10041)

**கந்தன் ஸ்ரோர்ஸ்**

பிரதான வீதி, பண்டத்தரிப்பு.
பல்பொருள் வணிகம்

**மங்களா றேடர்ஸ்**
ஆயுர்வேத மருந்துச்சரக்கு, கோவில் அபிஷேக பொருட்கள், எண்ணெய் வகைகள் வாசனைத் திரவியங்கள், கும்பாபிஷேக பொருட்கள் சங்காபிஷேகம் பொருட்கள் என்பனவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
பிரதான வீதி, பண்டத்தரிப்பு
021 490 9000
077 764 2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு எதிராக நாடளாவிய ரீதியில் கையெழுத்து போராட்டம்

## சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத தடைச்சட்ட சீர்திருத்தத்திற்கு எதிராக கையெழுத்து போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஊடக பேச்சாளர் எம்.பி. சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு எதிராக கையெழுத்துப் பெறும் செயற்பாட்டை இன்று முதல் (நேற்று) ஆரம்பிக்கவுள்ளோம். மாவட்ட ரீதியாக தமிழரசு கட்சியின் இளைஞர் அணியினர் செயற்படுவார்கள்.



கடந்த ஆட்சியில் கொண்டு வரப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டத்தை திருத்துவதாக சொல்லி, சர்வதேசத்தின் காதில் பூ சுற்றும் வேலையை அரசாங்கம் எடுத்துள்ளது. சீர்திருத்தம் என்று சொல்லி எடுத்திருக்கின்ற அந்த சட்டத்தில் எந்த வித சீர்திருத்தமும் கிடையாது. சீர்திருத்தம் என்று சொல்கின்ற அந்த விடயத்தை நாங்கள் எதிர்க்கின்றோம். நாங்கள் மட்டுமன்றி தென்னிலங்கையில் உள்ள முற்போக்கு சக்திகளுடம் எதிர்க்கின்றார்கள்.

இக்கையெழுத்துப் போராட்டத்திற்கு கட்சி பேதமின்றி அனைவரும் ஆதரவு கொடுக்க வேண்டும் இது நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும். விசேடமாக, வடகிழக்கிற்கு வெளியே மலையகத்திலும், வேறு பல இடங்களிலும் கையெழுத்துப் போராட்டத்தை நடத்தி பெரும் எண்ணிக்கையிலான மக்களின் கோரிக்கையாக முன்வைக்க உள்ளோம் என தெரிவித்தார். (4-6-101)

## நிர்வாகசபைத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ் வணிகர் கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் கடந்த சனிக்கிழமை வணிகர் கழகப் பணிமனையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன் போது புதிய நிர்வாக சபைத் தெரிவும் இடம்பெற்றது.

யாழ் வணிகர் கழகத்தின் தலைவராக ச.சிவகுமரன், உபதலைவர் இ.ஜெயசேகரன், செயலாளர் ச.சிவலோகேசன், உபசெயலாளர் ஜோ.செ.அலெக்ஸ் நிக்ஷன், பொருளாளர் செ.கஜன் ஆகியோர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர். மேலும் 16 நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (4-5)

## வர்த்தக சந்தை

(குப்பிழான்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீஅற்புதநர்த்தன விநாயகர் சனசமூக நிலையமும் குமரன் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் கோண்டாவில் குட்டிச் சுட்டி முன்பள்ளியின் வர்த்தக சந்தை நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு கோண்டாவில் சந்தியில் இடம்பெறவுள்ளது.

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீஅற்புதநர்த்தன விநாயகர் சனசமூக நிலையத் தலைவர் து.சுதன் தலைமையில் இடம்பெறவுள்ள மேற்படி நிகழ்வில் சங்கானை சிவப்பிரகாச இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் சிவபாலன் சர்வேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (4-6-18)

## மஹோற்சவம்

(குப்பிழான்)

ஊரெழு மடத்துவாசல் சுந்தரபுரி ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலய பிலவ வருட மஹோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ்வாலய மஹோற்சவத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 5 மணிக்கு வேட்டைத் திருவிழாவும், 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 8.30 மணிக்குச் சப்பரத் திருவிழாவும், 16 ஆம் திகதி புதன் கிழமை காலை 9 மணிக்குத் தேர்த் திருவிழாவும், மறுநாள் வியாழக்கிழமை காலை 9.30 மணிக்குத் தீர்த்தோற்சவமும், பிற்பகல் 6 மணிக்கு கொடியிறக்க உற்சவமும் இடம்பெறும். (4-6)

## அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை திங்கட் கிழமை காலை 6.30 மணிக்கு கிளிநொச்சி ஆனந்தபுரம் ஜெய துர்க்கை அம்பாள் ஆலயத்தின் பிரதம குருக்கள் முத்தமிழ் குருமணி சிவஸ்ரீ அமிர்த இலட்சுமிகாந்தக் குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலி பரப்பு நிகழ்வாக இடம்பெறும். (4-6)

## ஹெரோயினுடன் ஒருவர் கைது

(கரணவாய்)

நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது 900 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு நெல்லியடி பொலிஸார் துன்னாலைப் பகுதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது சந்தேகத்துக்கிடமான நபரொருவரை சோதனையிட்டனர்.

இதன்போது அவரது உடமையில் 900 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டது. இதனையடுத்து அவர் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்டவர் மல்லாவிப் பகுதியை சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர். (4-6-60)

## தொடர் திருட்டில் ஈடுபட்டவர் பொலிஸாரால் கைது



(கரணவாய்)

நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் தொடர்ச்சியாக திருட்டில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவரிடம் இருந்து பெருமளவு பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாக காங்கேசன்துறை குற்றத்தடுப்பு பிரிவினர் தெரிவித்தனர்.

நெல்லியடிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரணவாய் வேதாரண்யேஸ்வரா வித்தியாலயம், யாக்கரு வித்தியாலயம் மற்றும் விக்கினேஸ்வரா வீதியில் உள்ள மாதா ஆலயம் மற்றும் கரணவாய் பகுதியில் உள்ள வீடு ஆகியவற்றில்கடந்த ஆண்டு தொடர்ச்சியாக திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வந்தது.

இது தொடர்பில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட காங்கேசன்துறை மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கரணவாய் பகுதியைச் சேர்ந்த ஒருவரை கைது செய்ததுடன் அவரது வீட்டில் புதைத்து வைக்கப்பட்டிருந்த பெருமளவு பொருட்களையும் மீட்டனர்.

மேலும் அவரது உடைமையில் வாள் ஒன்றும் மீட்கப்பட்டதாக தெரிவித்த குற்றத்தடுப்பு பிரிவினர் பிரதான சந்தேகநபர் வெளிநாட்டுக்கு தப்பிச் சென்றுவிட்ட நிலையில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(4-6-60)

## இராசிபலன்

06.02.2022
தை 24, ஞாயிற்றுக்கிழமை
பஞ்சமி முற்பகல் 8.10 மணிவரை

ரேவதி முன்னிரவு 9.14 மணிவரை
சுபநேரம் - 9.35-11.05 மணிவரை
இராகுகாலம் - 5.05 - 6.35 மணிவரை

சந்திராஷ்டமம் - மகம் , பூரம்
சஷ்டி விரதம்

வளவன்

**மேஷம்** திடீர் பயணங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு, மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், சுபகாரியப் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.

**கடகம்** விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து இணையலாம், வழிபாட்டில் நம்பிக்கை கூடும், பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், உறவினர்களின் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**துலாம்** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மகரம்** உற்சாகத்தோடு செயற்படுவீர்கள், ஏட்டிக்குப் போட்டியாக இருந்தவர்கள் மனம் மாறுவர், உள்ளம் மகிழும் சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**ரிஷபம்** போசன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், புதிய பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு.

**சிம்மம்** தொழில் ரீதியாக சில குழப்பங்கள் தோன்றி மறையலாம், சிந்தித்து செயற்பட வேண்டி நாள், எடுத்த காரியங்களை நிறைவேற்ற கொஞ்சம் கஷ்டப்பட நேரிடலாம்.

**விருச்சிகம்** விருந்தினர்களின் சந்திப்பு இடம்பெறும் வாய்ப்புண்டு, தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**கும்பம்** குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், செல்வநிலை உயரும் நாள், விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

**மிதுனம்** மனநிறைவு கூடும் நாள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள்.

**கன்னி** கேளிக்கை கொண்டாட்டங்களில் நாட்டம் காட்டுவீர்கள், நட்பு வட்டம் விரிவடையும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**தனுசு** மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, வாகன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மீனம்** மற்றவர்கள் வாங்கியப் பொருட்களை பார்த்து நீங்களும் வாங்க பிரியப்படுவீர்கள், வழிபாடு ஆனந்தம் தரும், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள்.

அன்புத் தீயால் அனைத்துத் தீமையும் அணைக்க முடியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பிகா சற்குணநாதனின் கருத்து புலிகளின் பிரசாரத்தை நினைவூட்டுகிறது

## வெளிவிவகார அமைச்சு குற்றச்சாட்டு

(கொழும்பு)

மனித உரிமைகள் தொடர்பாக அரசாங்கத்தின் மீது அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்காக ஐரோப்பிய ஒன்றியம் தனது ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையைப் பயன்படுத்த வேண்டும் என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினர் அம்பிகா சற்குணநாதன் தெரிவித்த கருத்து தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொரோனா தொற்றினால் அனைவரதும் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், குறித்த சலுகையை இலங்கை இழந்தால், அதனால் பல இழப்புக்கள் ஏற்படும். அவரது குற்றச்சாட்டுக்கள் நிராகரிப்பதாகவும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் உள்நாட்டு செயன்முறைகள் மற்றும் நிறுவனங்களின் மூலம் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்தை நிவர்த்தி செய்வதற்கான தனது உறுதிப்பாட்டை இலங்கை வழங்கி வருகின்றது.

இன ரீதியாக சமூகங்களுக்கு பாகுபாடு காட்டப்படுவது குறித்த ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்கள் ஒரு காலத்தில் சமூகங்களுக்கிடையில் வெறுப்பைத் தூண்டிய தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரசாரத்தை நினைவூட்டுவதாக உள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது.

நாட்டில் அனைத்து தரப்பினருக்கும் சம உரிமை வழங்கப்பட்டுள்ளதாகவும் யுத்தம் நிறைவடைந்த பின்னர் இராணுவத்தினர் வசம் இருந்த தனியார் காணிகளில் 92 வீதத்திற்கும் அதிகமானவை காணி உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் ஏனையவற்றை கையளிக்கும் நடவடிக்கை இடம்பெறுவதாகவும் அவ் அமைச்சு சுட்டிக்காட்டியது. (நி)

## விமலம் திருமண சேவை

**மணமகள் தேவை**

- வயது 27 பரணி
- வயது 37 விசாகம்
- வயது 34 சதயம்
- வயது 33 பூசம், செவ்வாய்

**மணமகன் தேவை**

- வயது 35 மகம் செவ்வாய் 07 இல்
- வயது 32 மகம்
- வயது 33 புனர்பூசம்
- வயது 32 கனடா மகம்
- வயது 30 லண்டன் சூரி செவ் 05 இல்

தங்கள் தேடுதலுக்கும் தகுதிக்கும் ஏற்ற மணமகன்/ மணமகள் தேவையெனின் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

0014372446309 (கனடா)
076 324 6309 } யாழ்.நகர்
076 349 0083 }

(10061)

## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: செவ் 6 சூரி 12 இல் உயரம்: 5'6"
தகைமை/தொழில்: சுவிஸ்
எதிர்பார்ப்பு: படித்த பெண் உள்நாடு மட்டும்
தொ.இ: B/12254

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: செவ் 7 சூரி 12 இல் உயரம்:5'6"
தகைமை/தொழில் :Bsc Nursing PR இல்லை ஆஸ்பத்திரி (சிட்னி அவுஸ்திரேலியா)
எதிர்பார்ப்பு : படித்த PR உள்ள அல்லது அவுஸ்திரேலியா போகக் கூடிய மாணவர்கள் விரும்பத்தக்கது
தொ.இ: B/12255

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் 1
கி.பா: செவ் 10 சூரி 3 இல்
உயரம்:5'
தகைமை/தொழில்: கோட்டல் உரிமையாளர்
எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண்
தொ.இ: B/12256

பிறப்பு:1987இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் 4
கி.பா: 62 சூரி, செவ் 7 இல்
தகைமை/தொழில்: ஆங்கில ஆசிரியர்
எதிர்பார்ப்பு: படித்த பெண் உள்நாடு மட்டும்
தொ.இ: B/12257

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: மகம் 1
கி.பா: 43 ¾ செவ் 2 சூரி 1
உயரம்: 5'4"
தகைமை/ தொழில்:BA பட்டதாரி ஒரு வருடம் பூர்த்தி
எதிர்பார்ப்பு: உள்நாடு மட்டும் அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: G/12376

பிறப்பு: 1999 இந்து
நட்சத்திரம்: கேட்டை 4
கி.பா: செவ் 4 சூரி 8 இல் உயரம்: 5'6"
தகைமை/தொழில்: படப்பிடிப்பாளர்
எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்
தொ.இ:G/12377


பிறப்பு:1986 கிறிஸ்தவம் RC
உயரம்:5'2"
தகைமை/தொழில்:GA கலைப்பட்டதாரி ஆசிரியர்
எதிர்பார்ப்பு : தகுந்த அரச தனியார் உத்தியோகம் உள்நாடு மட்டும்
தொ.இ:G/12378

பிறப்பு: 1988 கிறிஸ்தவம் RC
உயரம்:5'2"
தகைமை/தொழில் GA கலைப்பட்டதாரி ஆசிரியர்
எதிர்பார்ப்பு:தகுந்த அரச தனியார் உத்தியோகம் உள்நாடு மட்டும்
தொ.இ:G/12379

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.

# மணிவிழா வாழ்த்து

## திரு. சிவானந்தன் சர்வானந்தன்



### சேவை விபரம்

மா/மின்காத் மகா வித்தியாலயம்,
திக்வெல்லை, மாத்தறை
16.03.1989 - 31.12.1993

வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம், வவுனியா
01.01.1994 - 22.10.2017

வ/தமிழ் மத்திய மகா வித்தியாலயம், வவுனியா
23.10.2017-05.02.2022

திக்வெல்லையில் தொடங்கிய பயணம் வவுனியா தமிழ்
மகள் பெற்ற பூமியில் நிறைவு பெற
இடையில் இறம்பைகள் கல்லூரியில் இரு
தசாப்தங்களுக்கும் மேலாக
உன்னை யாரென்று நிரூபித்த வழித்தடங்கள் இவை

நிமிர்ந்த நடை கம்பீரமான தோற்றம் என்றாலும்
அந்தத் தடித்த மீசைக்குள் ஆயிரம் மிடுக்குகள்
அதற்குச் சற்றுக் கீழே உன் உதடு
உதிர்க்கும் நமட்டுச் சிரிப்பிற்குள் ஓராயிரம் அர்த்தங்கள்

சுபாவம் ஏதோ அமைதிதான் எந்தப் பக்கமும் சாராத
நடுநிலையான கொள்கைகள் தான் பணிவில்
பண்பில் உயர்ந்து நின்றே
முந்திக்கொண்டு மற்றவர்களுக்கு உதவுவதில் உனக்கு
நிகர் நீயே தான்

கடமையில் கண்ணாக கணக்கியலிலே புலியாக எதையுமே
நேர்த்தியாக திடமான மனதோடு நீ
செய்து காட்டியவை எல்லாம் எங்களுக்கு முன்னுதாரணமாக
சர்வ சகல ஆனந்தத்துடன் உன் ஓய்வுக் காலம்
சிறப்புற வாழ்த்துகின்றோம்.

**ஆசிரிய நண்பர்கள்**

(9994)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இணுவில் திருவருள்மிகு

ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் ஆலய

# புனராவர்த்தன அஷ்டபந்தன நிகமோக்த நவகுண்டபக்ஷ மஹாயாக கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

## திருமுழுக்குத் திருமுகம் - 06.02.2022

06.02.2022 காலை 8.00 மணிக்கு மேல் 8.45 இற்குள் வரும் கும்பலக்கினத்தில் ஸ்தூபிகள் கும்பாபிஷேகம் தொடர்ந்து பிரதான கும்பங்கள் வீதி பிரதட்சனம்
8:47 இற்கு மேல் 10.26 மணிக்குள் வரும் மீனலக்கின சுபமுகூர்த்தத்தில் மகாகும்பாபிஷேகம்



## ஆசியுரை

சிவஸ்ரீ.சோமஸ்கந்த அரவிந்தக் குருக்கள்
பிரதமகுருக்கள்
இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் கோவில்.

ஆன்மா லயப்படும் இடம் ஆலயம் என அழைக்கப்படுகின்றது. இவ் ஆலயத்தினை பொருத்தமான இடத்தில் நிர்மானிப்பதற்கு தெரிவு செய்து அவ் இடத்தை உழுது புனிதப்படுத்தி ஆகம நெறிமுறைகளுக் அமைவாக நிர்மானித்து கும்பாபிஷேகம் செய்து நித்திய, நைமித்திய கிரியைகளை செய்து இறைவன் அருள் பெற்று வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து இறுதியில் எல்லையில்லா சிவானந்தப் பேற்றாம் முக்திக்கு வழிகாட்டப்படுகிறது.

இவற்றுள் மிகமுக்கியமாக நைமித்திய கிரியைகளுள் ஒன்று கும்பாபிஷேகம் ஆகும். மகா கும்பாபிஷேகமானது பன்னிரெண்டு வருடங்களுக்கு ஒருமுறை நடாத்துவது சாஸ்திர சம்மதமாகும். அஷ்டபந்தனத்தினுடைய கால எல்லை பன்னிரெண்டு வருஷங்களாகும். இவ்வாறு நடைபெறும் கும்பாபிஷேகங்களில் எமது ஆலயத்தில் இன்று நடைபெறும் மகா கும்பாபிஷேகமானது மிகவும் சிறப்பாக நடைபெறுவதற்கு எல்லாம் வல்ல விநாயகருடைய திருவருள் தான் காரணம்.

எமது ஆலயத்தில் இம்முறை நடைபெறும் மகா கும்பாபிஷேகமானது நாங்கள் அறிந்து ஏழாவது தடவையாக நடைபெறுகின்றது. அன்றைய காலம் முதல் இன்றைய காலம் வரை எமது இணுவில் ஊர்மக்கள் அனைவரும் பெரும் நன்கொடைகள், தொண்டுகள் அர்ப்பணிப்புகள் போன்றவற்றின் மூலமாக எமது ஆலயத்தை வளர்த்துள்ளனர்.

இவ்வாறு எல்லாரது பூரணமான சரீரதிரவிய தன மானசீக பிரார்த்தனைகள் (சரீரஉதவி, பொருள் உதவி, பண உதவி மற்றும் மானசீகமான) அதாவது கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற வேண்டும் என்று மனதார பிரார்த்தனை செய்தவர்கள், இணுவில் விநாயக தொண்டர்கள் எல்லோரும் இரவு, பகல் பாராமல் தமது சரீரத்தினால் சரியைத்தொண்டு மூலம் செய்த உதவிகள் என அனைவரது பூரணமான ஒத்துழைப்பினால் எமது ஸ்ரீ பரராஜசேகர பிள்ளையாரின் நவகுண்டம் அமைத்து நடைபெறும் இக் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையாரின் பாதார விந்தங்களைத் தொழுது நல்லாசிகள் வழங்குவதோடு உலகெங்கும் வாழுகின்ற எம் பெருமான் அடியார்கள் அனைவருக்கும் மற்றும் எமது கிராமம், எமது நாடு, எமது தேசம் மற்றும் உலகெங்கும் வாழ்கின்ற அனைத்து மக்களும் சுபீட்சமாகவும் ஆரோக்கியமாகவும் வாழ பரராஜசேகரப் பிள்ளையாரை மனதார பிரார்த்திக்கின்றேன்.



## ஆசியுரை

பிரதிஷ்டா பிரதமகுரு
வேதாகம சிரோன்மணி
சிவஸ்ரீ சத்திய சிவகுமாரக்குருக்கள் இணுவில்

ஐம்பூதங்களில் ஐக்கியமாகி எங்கும் நிறைந்துள்ள ஐந்துகரத்தான் ஆனைமுகத்தான் இணுவையம்பதி அருள்மிகு பரராஜசேகரப் பிள்ளையார் பொற் பாதங்களை மனதில் நினைந்து வணங்கி "நிகமோத்த நவகுண்ட பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம்" எனும் பெருஞ்சாந்திவைபவத்தில் என்றுமே "எங்கள் பிள்ளையார்" என்கின்ற உணர்வு பூர்வமான பக்தியுடன் வழிபடுகின்ற அனைத்து பக்த அடியார் வாழ்விலும் சகல விதமான நன்மைகளும் பெற வேண்டும் என்று எம்பெருமானை மனதார வேண்டிக் கொண்டு வாழ்வில் நல்லெண்ணம், நற்சிந்தனை, நற்செயல், நல்வாழ்க்கை, நற்சாந்தி என்கின்ற உன்னதமான உயர்வான வாழ்க்கையாக இம் மனிதப் பிறப்பான இவ் ஜென்ம வாழ்க்கை சிறப்பாகவும் சகல சௌபாக்கியங்களும் பெற்று அனைவரும் வாழ வேண்டும் என்று எம்பெருமானை வேண்டிக் கொண்டு நல்லாசிகள் வழங்குவதில் மனநிறைவடைகின்றோம்.

கல்வி, கலைகள், தமிழ்கலாசாரம் என்ற உள் உணர்வோடு சிறப்பாக அனைவரும் வாழவேண்டி பிள்ளையாரப்பாவை பிரார்த்தனை செய்து ஆலய வளர்ச்சிக்கும் நித்திய பூஜை அனுஷ்டானங்களுக்காகவும் தனது வாழ்க்கையின் பெரும்பகுதியை அர்ப்பணித்து பிள்ளையார் பாதத்தினை சரணாகதி அடைந்த தெய்வத்திரு சிவஸ்ரீ வை சோமஷ்கந்த குருவை மனதில் நினைந்து மன நிறைவாக விநாயகப் பெருமானின் திருவருள் வேண்டி அனைவருக்கும் நல்லாசிகள்! நல்லாசிகள்! நல்லாசிகள்!



## ஆசியுரை

வாழ் நாள் சாதனையாளர்
சிவாகமகலாநிதி பிரம்மஸ்ரீ தாணுநாத மகாதேவக் குருக்கள் காயத்திரி பீடம், இணுவில்

இணுவில் திருவருள்மிகு வல்லவாம்பிகா சமேத பரராஜசேகர விநாயகர் கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற திருவருள் கைகூடியிருக்கிறது. இவ்வாலயத்தின் பக்தர்கள் விநாயகரிடம் தீராத பக்தி கொண்டவர்கள். 12 வருடத்திற்கு ஒரு முறை ஆலயத்தை புதுப்பிப்பதிலும் ம'ாகும்பாபிஷேகம் நடத்துவதிலும் சிரத்தையோடு பணியாற்றி வருவது நாமெல்லோரும் அறிந்ததே. இந்த ஆலயத்தின் ஆசார்ய பரம்பரையும் சிறப்பு மிக்கது. பிதாமகராக இருந்த சிவஸ்ரீ சதாசிவக்குருக்கள், சிவஸ்ரீ சிவஞானக்குருக்கள், பிரம்மஸ்ரீ சோமஸ்க்கந்தகுருக்கள், பிரம்மஸ்ரீ அரவிந்தக்குருக்கள் எல்லோருமே விநாயகருடைய நித்திய நைமித்திய கிரியைகளை நடாத்துவதில் சிரத்தை மிக்கவர்களாக இருந்தவர்கள். இப்போது நடைபெறும் இவ்வாலயத்தின் கும்பாபிஷேகத்தை சிவஸ்ரீ சதாசிவக்குருக்கள் நடாத்தி வைத்த போது நான் அவருக்கு பத்ததி வாசித்திருக்கிறேன். இவ்வாலயத்தின் நித்திய சிவாச்சார்யாராக பணியாற்றிய பிரம்மஸ்ரீ சோமஸ்க்கந்த குருக்கள் சமஸ்கிருத அறிவு நிரம்பியவர். இம்முறை நடைபெற இருக்கும் கும்பாபிஷேகத்திற்கு அவர் 6 மாதங்கள் சிரமப்பட்டு ஆலயத்திற்கு சொந்தமாக ஒரு பத்ததியை தன் கையால் எழுதிவைத்திருக்கிறார். நோயுற்றிருந்த நிலையிலும் அவர் அப்பணியை நிறைவு செய்து வருங்கால சந்ததியினருக்கு வழிகாட்டியிருக்கிறார். அவர் இந்த ஆலயத்தை வழி நடத்தியதே ஒரு தனிச்சிறப்பு. மக்கள் அனைவரும் திருப்பணிகளுக்கு வாரி வாரி கொடுத்து அவருக்கு பக்க பலமாக நின்றார்கள். அவர் விண்ணிலிருந்து இம்முறை நடைபெற இருக்கும் இவ்வாலய கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற அருள் புரிவாராக!



## ஆசியுரை

கலாநிதி ஆறு திருமுருகன்
தலைவர்ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை
தலைவர்- சிவபூமி அறக்கட்டளை இலங்கை
உப.தலைவர் அகில இலங்கை இந்து மாமன்றம்.

எங்கள் குடும்பத்தின் குல தெய்வமாகிய இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் திருக்கோவில் மகா கும்பாபிஷேகம் குறித்து வாழ்த்துவதில் ஆனந்தமடைகிறேன். மிகத்தொன்மை வாய்ந்த இத் திருக்கோவில் அந்நியர் ஆட்சியில் சிதிலமுற்றது என்பது வரலாறு. மடத்தில் வைத்து மறைவாகப்பூசித்து எம் முன்னோர் பாதுகாத்து வழிபாட்ட பாரம்பரியம் இன்று பெரும் விருட்சமாக வளர்ச்சி பெற்றுவிட்டது. ஈழத்திலுள்ள விநாயகர் தலங்களில் மிகச்சிறந்த சிறப்புமிக்க தலமாக இத்தலம் இன்று விளங்குகிறது. அடியார்களின் அயராத பக்தியின் விளைவாக இத்தலம் பெருங் கோவிலாகக் காட்சியளிக்கிறது. ஒரு காலத்தில் எனது தாயார் போன்ற பெண் அடியவர்கள் சாணி கொண்டு மெழுகிய பெரிய கோயில் இன்று பளிங்குக் கருங்கற்களை தளமாகக் கொண்ட செல்வச்சிறப்போடு காட்சி தருவது நாம் செய்த புண்ணியமே.

எனது தாயாரின் தந்தை பொன்னையா அவர்கள் தினமும் விடிவிளக்கு ஏற்றுவார். பத்துச் சதம் ஒரு போத்தல் தேங்காய் எண்ணெய் அன்று அதன்பெறுமதிக்கே அல்லற்பட்ட காலம். அப்படியான சூழலில் ஈரநெஞ்சோடும். ஈர வேட்டியுடனும் அவர் ஏற்றிய விளக்கின் ஒளி எம் சந்ததியை வாழ வைத்தது. இன்று பிள்ளையாரின் பக்தர்கள் தம்மை வாழவைத்த குலதெய்வத்திற்கு எக்குறையும் விடாது பல கோடி செலவு செய்து இந்திரலோகமாக மாற்றியுள்ளார்கள்.

இணுவில் மண்ணின் சிறப்பைக் காக்கும் பரராஜசேகரப்பிள்ளையாரின் திருவருட் சிறப்பால் பன்னிரெண்டு ஆண்டுக்கொருமுறை காலந்தவறாது புதிய திருப்பணிகள் நிறைவேறிக் கும்பாஷேகம் நடைபெறுவது வழக்கமாகிவிட்டது. பல வருடங்களுக்கு முன் எம் மூதாதையர் கற்பூரத்தீபத்தின் மேல் சத்தியம் செய்து இனிமேல் பஞ்சாயத்துக் கூடி நிர்வாகம் செய்யாமல் அனைவரும் பிள்ளையாரின் அடியவர்களாக கோவிலைப் பராமரிப்பதென்ற உயர் பண்பாடு, இன்றுவரை தொடர்வது அற்புதமே. அதன் பெருமையை எம் தலைமுறை காத்துவருவது நாம் செய்த புண்ணியமே. பரராஜசேகரப்பிள்ளையார் ஐந்து தடவைகள் உயிர்யானையில் ஏறி வீதி வலம் வந்த சிறப்பு என்றும் மறக்கமுடியாது.

அற்புதம் நிறைந்த எம்பெருமானின் கும்பாஷேகம் சிறக்க உழைத்த சிவாச்சாரிய பெருமக்களுக்கும், திருப்பணி வேலைகளில் அயராது உழைந்த அடியவர்களுக்கும் என்றும் நாம் நன்றியுடையோம், மகா கும்பாபிஷேகம் சிறக்க ஆவணமாக மலரை வெளியிட முன் வந்த திருநெறிய தமிழ்மறைக் கழகத்தினருக்கும், இதய பூர்வமான வாழ்த்துக்களும், நன்றிகளும் உரித்தாகுக. கும்பாபிஷேகம் சிறப்போடு நடைபெற்று, அனைவரும் சீரோடும். சிறப்போடும் வாழ சிறியேனின் நல்லாசிகளையும், பிரார்த்தனையையும் தெரிவித்து அமைகின்றேன்.

(c-3709)


Kajasankavi Centre & Printers
Offset & Screen Quality Printers
Dealers In All Invitation Cards
No. 237, K.K.S Road, Jaffna.

Sakthuvel Hardware
K.K.S Road,
Kondavil West, Kondavil (Inuvil)
T.P No : 021 492 1213

சிறி ஐங்கரன் வெதுப்பகம்
இணுவில் தெற்கு, இணுவில்.

கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்துவோர்.

ஐங்கரன் பான்சி
இல.38 Dr. சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.

பெஷன் ஹவுஸ்
இல. 203, (65) கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

Santhi Textiles
No. 157, 158, Modern Market, (Power House Rd)
K.K.S Road, Kondavil

Profitable Construction
All Type of Construction
Inuvil West, Inuvil.

கணேசன் சென்ரர்
கே.கே.எஸ். வீதி, இணுவில்.

Nathan & Brother
கே.கே.எஸ். வீதி, இணுவில்.

ஆனந்தன் கட்டடப் பொருள் விற்பனை நிலையம்
கே.கே.எஸ். வீதி, இணுவில்.

அம்பிகாபதி அழகு மாடம்
கே.கே.எஸ். வீதி, இணுவில்.

Sri Kumaran Hardwares
No. 83, Stanly Road, Jaffna.
Tel : 021 222 2798

UNIQUE
Inuvil South.
077 652 3229

K.R.S உற்பத்திப் பொருட்கள்
கே.கே.எஸ். வீதி, கோண்டாவில்.

யோகா புடவையகம்
கே.கே.எஸ். வீதி, கோண்டாவில்.
077 607 9925

துரை தச்சுத்தொழிலகம்
தாவடி வடக்கு, கொக்குவில்.

KSSK Construction
Inuvil West, Chunnakam.
076 200 5244

லிங்கம் கொமினிகேசன்
ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோவிலடி, மானிப்பாய் வீதி.

N.A.R & CO
இணுவில் தெற்கு, இணுவில்.
யாழ்ப்பாணம்.

அண்ணா கோப்பி

Ayngaran International Films PVT.Ltd
Ayngaran International (UK).Ltd

ANDRA Printers
356A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 221 8929 / 077 662 2981

ஜொலி கல்யாண மண்டபம்
இணுவில் மேற்கு, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகப்பெரிய பலவீனங்கள், சில வேளைகளில் மிகப் பெரிய நன்மையாகவும் சில நேரங்களில் மிகப் பெரிய வலிமையாகவும் வேடம் தரித்து வருகின்றன.
– விவேகானந்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அழுகையர் தொழுகையராக இலங்கையின் ஆட்சியர்

இலங்கையின் ஆட்சி அதிகார பீடத்தைக் கட்டுப்படுத்தும் சர்வவல்லமை பௌத்த பீடங்களுக்கும் மகாநாயக்கர்களுக்குமே உண்டென்பது தெரிந்த உண்மை.

இலங்கையின் அதியுச்ச அதிகாரப் பதவியில் அமருகின்ற ஜனாதிபதி பதவியேற்றவுடன், மகாநாயக்கர்களிடம் சென்று முழந்தாளில் இருந்து கூப்பிய கரத்தராய் பிக்குகளின் பாதம் பணிந்து தொழுதேத்தி வணங்குவதைக் காண முடியும்.

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் ஆட்சித் தரப்பில் இருப்பவர்கள் பௌத்த பீடாதிபதிகளை வணங்கும்போது, பதிலுக்கு அவர்கள் எந்த எதிர்வினையும் காட்டாமல் இருப்பது பௌத்த பீடங்களுக்கு இருக்கக்கூடிய உச்ச அதிகாரத்தைப் பிரதிபலிக்கும்.

இதுதவிர, நாட்டின் சுதந்திர தின நிகழ்வின்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பௌத்த மகாநாயக்கர்களை பணிந்து தொழுதேத்தியபோது, இலங்கையின் சுதந்திரம் என்பது அர்த்தமற்றுப் போனது.

முன்னைய சுதந்திர தின நிகழ்வுகளின் போது, நாட்டின் தலைவர் என்ற வகையில் முப்படைத் தளபதிகள் புடைசூழ ஜனாதிபதி ஆட்சிக்குரிய அதிகாரத்துடன் சுதந்திர தின மரியாதையை ஏற்றுக் கொள்வார்.

ஆனால் 74ஆவது சுதந்திர தினம் நேற்று முன்தினம் நடைபெற்றபோது அங்கு பிரசன்னமாகியிருந்த பௌத்த மகாநாயக்கர்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிந்தேத்தியதைப் பார்த்தபோது, இந்த நாட்டின் ஆட்சியாளர்களைப் பதவியில் இருத்துவதும் அவர்களைப் பதவியினின்று விலக்குவதுமான வல்லமை பௌத்த பீடங்களிடமே உண்டென்பது உறுதியாயிற்று

ஆம், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராகப் பௌத்த தேரர்கள் போர்க்கொடி தூக்கினர்.

பௌத்த பிக்குகளின் எதிர்ப்பு தென்னிலங்கை முழுமைக்கும் பரவி, கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சி ஆட்டம் காணப்போகிறது என்றிருந்தபோது,

ஆனந்த தேரரை கொழும்புப் பல்கலைக் கழகத்தின் வேந்தராகவும் ஒரே நாடு ஒரே சட்டம் என்ற ஜனாதிபதி செயலணியின் தலைவராக ஞானசார தேரரையும் ஜனாதிபதி நியமித்தபோது, ஜனாதிபதிக்கு எதிரான பௌத்த பிக்குகளின் கோசம் தணிந்தது.

இதற்கு மேலாக, மகிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியில் தொடர வேண்டும். அவர் பதவியில் இருந்து இராஜினாமாச் செய்தால், அது கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக்கு ஆபத்து எனக்கூறி மகிந்த ராஜபக்ஷவைத் தொடர்ந்தும் பிரதமர் பதவியில் இருக்குமாறு செய்தவர் ஆனந்த தேரர்.

ஆக, இப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சி என்பது பௌத்த பீடங்கள் கொடுத்த வரம் எனலாம்.

எனவே அழுகையர் தொழுகையராக மகாநாயக்கர்களைப் பணிந்தேத்துவதே ஆட்சி நிலைப்பதற்கான அருமருந்து என்றானபோது; ஒற்றை ஆட்சி, பௌத்தத்துக்கே முதலிடம் என்பதே ஜனாதிபதியின் பேச்சாக இருக்கும்.

# முழுமையான தடுப்பூசி செலுத்தாதவர்கள் பொது இடங்களில் நுழையத் தடை

## ஏப்ரல் 30 முதல் அமுல்; வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

கொரோனா வைரஸ்க்கு எதிராக முழுமையாக தடுப்பூசியை செலுத்திக் கொள்ளாதவர்கள் பொது இடங்களில் நுழைவதை தடை செய்யும் வகையில் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த உத்தரவு ஏப்ரல் 30ஆம் திகதி முதல் அமுலுக்கு வருகிறது.

கொரோனா வைரஸ்க்கு எதிராக முழுமையாக தடுப்பூசி போடப்பட்டதற்கான ஆதாரம் இன்றி, உரிய அதிகார சபையால் விலக்கு அளிக்கப்பட்டாலன்றி, பொது இடங்களில் பிரவேசிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல வர்த்தமானி மூலம் குறிப்பிட்டுள்ளார்.

சம்பந்தப்பட்ட தடுப்பூசியில் இருந்து விலக்கு பெற்ற நபர்களுக்கு வழங்கப்படும் விலக்கு சான்றிதழ் சுகாதார அதிகாரிகளால் வழங்கப்படும் வழிகாட்டுதல்களில் குறிப்பிடப்படும் என்றும் அது குறிப்பிட்டுள்ளது. (ம)

# தனித்து முடிவெடுக்கும் துணிவு ஜனாதிபதி கோட்டாவிடம் இல்லை

## அத்துரலிய ரத்ன தேரர்

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ராஜபக்ஷ குடும்பத்தை விடுத்து, தனியான அரசியல் முடிவுகளை எடுக்கும் இயலுமை இல்லை என பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.

சிங்கள பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனை தெரிவித்தார்.

தனது சகோதரரான பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் பலத்தில் ஜனாதிபதி அரசியல் செய்து வருகிறார்.

இதனால், அரசியல்வாதிகளை முகாமைத்துவம் செய்யும் இயலுமை ஜனாதிபதிக்கு இல்லை.

தனது குடும்பத்தில் இருந்து விடுபடும் அளவுக்கான தைரியமும் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு இல்லை. அத்துடன் கோட்டாபய ராஜபக்ஷ முப்பது ஆண்டுகள் இலங்கையில் வசிக்கவில்லை என்பதால், இலங்கை மண்ணுடன் இருக்கும் பிணைப்பு சற்று குறைவாக இருக்கின்றது எனவும் அத்துரலிய ரத்ன தேரர் குறிப்பிட்டார். (நி)

## இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் குறித்து பிரிட்டன் தீவிர கவனம்

(கொழும்பு)


இலங்கையில் படையினரால் நிகழ்த்தப்பட்ட வன்முறைகள் மற்றும் சித்திரவதைகள் குறித்து முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக அவதானம் செலுத்தியிருப்பதாக பிரித்தானிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அதேநேரம் இலங்கையில் மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக்கூறல் நிலைவரத்தைக் கண்காணிப்பதற்காக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்குத் தொடர்ந்து ஆதரவு வழங்குவதற்குத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர் டொனியா அன்டோனியஸியினால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகத்திற்குப் பொறுப்பான அமைச்சர் அமன்டா மில்லிங் இதனை தெரிவித்தார்.

மேலும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46/1 தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள கடப்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் மீண்டும் வலியுறுத்தினார். (நி)

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



❖ தம் சிலுவையைச் சுமக்காமல் என் பின் வருபவர் எனக்குச் சீடராய் இருக்கமுடியாது.

❖ உப்பு நல்லது. ஆனால், அது உவர்ப்பற்றுப் போனால் எதைக் கொண்டு அதை உவர்ப்புள்ளதாக்க முடியும்? அது நிலத்துக்கோ எருக்குழிக்கோ பயனற்றது. அது வெளியே கொட்டப்படும். கேட்கச் செவியுள்ளோர் கேட்கட்டும்"

❖ மனம் மாறத் தேவையில்லாத் தொண்ணூற்றொன்பது நேர்மையாளர்களைக் குறித்து உண்டாகும் மகிழ்ச்சியை விட, மனம் மாறிய ஒரு பாவியைக் குறித்து விண்ணுலகில் மிகுதியான மகிழ்ச்சி உண்டாகும்.

❖ நேர்மையற்ற செல்வத்தைக்கொண்டு உங்களுக்கு நண்பர்களைத் தேடிக்கொள்ளுங்கள். அது தீரும்பொழுது அவர்கள் உங்களை நிலையான உறைவிடங்களில் ஏற்றுக் கொள்வார்கள்.

❖ மிகச் சிறியவற்றில் நம்பத் தகுந்தவர் பெரியவற்றிலும் நம்பத் தகுந்தவராய் இருப்பார். மிகச் சிறியவற்றில் நேர்மையற்றவர் பெரியவற்றிலும் நேர்மையற்றவராய் இருப்பார்.

❖ "எந்த வீட்டு வேலையாளும் இரு தலைவர்களுக்குப் பணிவிடை செய்யமுடியாது. ஏனெனில், ஒருவரை வெறுத்து மற்றவரிடம் அன்பு கொள்வார் அல்லது ஒருவரைச் சார்ந்து கொண்டு மற்றவரைப் புறக்கணிப்பார். நீங்கள் கடவுளுக்கும் செல்வத்துக்கும் பணிவிடை செய்யமுடியாது."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுவன்-மயிலிட்டி வீதியை பார்வையிட்டார் சுமந்திரன்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கட்டுவன் - மயிலிட்டி வீதியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் நேரில் சென்று பார்வையிட்டார்.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திற்கான தனியாருக்குச் சொந்தமான நிலத்தின் ஊடாக தற்போது பாதை அமைக்கும் விடயம் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நேற்று சம்பவ இடத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டதோடு சட்டப்படி சுவீகரிக்காது நில உரிமையாளரின் சம்மதம் இன்றி அவர்களின் கிணறுகளை இடித்து அழித்து அதன்மேல் புதிய வீதிகளை அமைக்கின்றனர்.

அதனை நேரில் பார்வையிட்டு அடுத்த சட்ட நடவடிக்கை தொடர்பில் ஆராய்வதற்காகவே சம்பவ இடத்திற்கு வருகை தந்ததாக குறிப்பிட்டதோடு அடுத்த கட்டமாக இந்த விடயமும் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாகத் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினரோடு நில உரிமையாளர்கள், வலிகாமம் வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் உள்ளிட்டவர்களும் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.(4-6-33)

# பயங்கரவாத தடைச்சட்டத்ததை நீக்கக்கோரி கையெழுத்து வேட்டை



(முறிகண்டி)

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கக்கோரி கையெழுத்து வேட்டை நேற்று கிளிநொச்சியில் ஆரம்பமானது. குறித்த நிகழ்வு இலங்கை தமிழரசுக் கட்சியில் வாலிபர் முன்னணியினால் கிளிநொச்சி சேவைச் சந்தை வளாகத்தில் ஆரம்பமானது.

குறித்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், கரைச்சி பிரதேச சபை தவிசாளர் வேழமாலிகிதன், கரைச்சி பிரதேச சபை உறுப்பினர்கள், வர்த்தகர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் கைதான டிவனியாவின் மகளும் குறித்த நிகழ்வில் கலந்துகொண்டு ஒப்பமிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (4-5-100-316)

# அனைத்து அரசியல் கைதிகளையும் விடுவிக்க முயற்சி எடுத்துள்ளோம்

## காதர் மஸ்தான் தெரிவிப்பு

(நெளுக்குளம்)

நல்லாட்சி காலத்தில் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படாத நிலையில் தற்போது பல அரசியல் கைதிகளை ஜனாதிபதி விடுவித்துள்ளார். இந்நிலையில் ஏனையவர்களையும் விடுவிக்க தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற முறையில் நாம் முயற்சி எடுத்துள்ளோம் என வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான் தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நல்லாட்சி காலத்தில் எத்தனை அரசியல் கைதிகளை விடுவித்தார்கள். எனினும் தற்போதைய ஜனாதிபதி பொறுப்பேற்றவுடன் அரசியல் கைதிகளின் விடுதலை இடம்பெற்றுள்ளது.

அது மாத்திரமின்றி அரசியல் நோக்கத்திற்காக கைது செய்யப்பட்ட அனைவரையும் விரைவாக விடுதலை செய்வதற்கான முனைப்பினை சம்பந்தப்பட்ட அமைச்சர் மற்றும் ஜனாதிபதியுடன் தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற வகையில் பேசி தொடர் முயற்சிகளை எடுத்துள்ளோம்.

அத்துடன் உரிமை சம்பந்தப்பட்ட பிரச்சனைகளையும் அவ்வப்போது விளக்கம் கொடுத்து அதற்கான ஏற்பாடுகளையும் செய்யலாம் என்ற முழு நம்பிக்கையில் இருக்கின்றோம். இந்தியாவில் இருந்து வரும் மீனவர்கள் எமது மீனவர்களை பாதிக்கும் வண்ணம் தொடர்ச்சியாக செயற்பட்டு வருகின்றனர்.

எனவே இரண்டு நாடுகளுக்கிடையில் முரண்பாடு வராத வகையில் ஒரே மொழி பேசும் சமூகம் என்பதனை உணர்ந்து இந்தியாவில் இருந்து வரும் மீன்வர்கள் எமது மீனவர்களின் வாழ்வாதாரத்தினை பாதிக்காத வகையில் அவர்களது எல்லையில் இருந்து மீன்களை பிடிக்க வேண்டும் என்பதனை ஒரு கோரிக்கையாக வைக்கின்றேன் என மேலும் தெரிவித்தார். (4-6-299)



புலம்பெயர் அமைப்புக்களின் நிதிப்பங்களிப்புடன் ஊனமுற்றோர்களுக்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக பருத்தித்துறை முனையிலிருந்து தெய்வேந்திர முனை வரையான சைக்கிள் ஓட்ட பவனி நேற்று ஆரம்பமானது. (படம்:-மகாலிங்கம்)

# நெல் அறுவடை செய்ய முடியாத நிலையில் வடமராட்சி விவசாயிகள்

(கரணவாய்)

வடமராட்சி பகுதி விவசாயிகள் நெல் அறுவடை செய்ய முடியாத நிலைக்கு இம்முறை தள்ளப்பட்டுள்ளனர். அண்மையில் பெய்த மழை காரணமாக வயல்களில் நீர் நிரம்பியுள்ளதுடன் நெற் கதிர் கள் நீரில் மூழ்கும் நிலையில் காணப்படுகின்றன.

இதனால் விவசாயிகள் நெற்கதிர்களை அறுவடை செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். எனவே உரிய அதிகாரிகள் வயல் நிலங்களில் உள்ள மழை நீரை வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-6-60)

### ஒரு கோடி பெறுமதியான

# ஐஸ் போதைப்பொருளுடன் மன்னாரில் மூவர் கைது

(மன்னார்)

மன்னார் பொலிஸ்பிரிவுக்குட்பட்ட எருக்கலம் பிட்டி பகுதியில் ஐஸ் போதை பொருளுடன் மன்னார் பனங்கட்டு கொட்டு பகுதியை சேர்ந்த இருவரும் பேசாலை பகுதியை சேர்ந்த ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உள்ளூர் பெறுமதியில் ஒரு கோடி மதிக்கத்தக்க ஒரு கிலோ ஐஸ் போதை பொருளுடனேயே மேற்படி மூன்று சந்தேக நபர்களை மன்னார் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்கள் மூவரும் மன்னார் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடதக்கது. (4-6-285)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 450 | 400 | 450 |
| உருளைக்கிழங்கு | 140 | 200 | 150 |
| பச்சைமிளகாய் | 600 | 550 | 500 |
| தக்காளி | 150 | 140 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 80 | 60 |
| கோவா | 220 | 230 | 280 |
| கரட் | 420 | 450 | 500 |
| பூசணி | 140 | 130 | 180 |



இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 74 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு பொது மக்களுக்கான காணி அளிப்பு பத்திரங்கள் மற்றும் நட்ட ஈட்டு கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் பரமோதயம் ஜெயராணி தலைமையில் இடம் பெற்றது.

(படம்:-தவசீலன்)


யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி

பழைய மாணவர் சங்கம்

(தாய்ச்சங்கம்)

விசேட பொதுக்கூட்டம்

காலம் : 13.03.2022

இடம் : பஞ்சலிங்கம் கேட்போர் கூடம்

நேரம் : மு.ப. 10.00 மணி

நிகழ்ச்சி நிரல் : 1. வருடாந்த பொதுக்கூட்டம் தொடர்பாக ஆராய்தல்.
2. யாப்பு திருத்தம்

குறிப்பு : யாப்பு திருத்தம் தொடர்பான பிரேரணைகளை 20.02.2022 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கவும்.

- செயலாளர்

(C-3715)


# புதையல் தோண்டிய ஆறுபேர் கைது

(முறிகண்டி)

கிளிநொச்சி இராமநாதபுரம் அழகாபுரியில் புதையல் தோண்டமுற்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் ஆறு பேர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் இருந்து புதையலை கண்டறிவதற்காக பயன் படுத்தபடுத்தப்படும் ஸ்கானர் கருவி ஒன்றும் இராணுவத் தினரால் மீட்கப்பட்டது.

கிளிநொச்சி இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலிற்கு அமைவாக குறித்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

கைதானவர்கள் தருமபுரம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-5-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 28 பேர்...

எனர்

இதன்மூலம் இலங்கையில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 15,572 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## +1,287...

மேலும் 1,287 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதற்கமைய நாட்டில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 617,189ஆக அதிகரித்துள்ளது. (ம)

## வீடு தேடி...

டும் வேலைத்திட்டத்தில், இராணுவ மற்றும் சுகாதாரத் துறை பிரதிநிதிகளின் குழுக்கள் ஈடுபடுத்தப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

## திடீரென...

சனிக்கிழமை பிற்பகல் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் கரவெட்டி, கீரிப்பள்ளியைச் பகுதியைச் சேர்ந்த விக்னேஸ்வரமூர்த்தி நிதர்சன் (வயது-26) எனும் இளைஞரே உயிரிழந்துள்ளார்.

மேற்படி இளைஞர் கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரிக்கு முன்பாகவுள்ள நெல் வயலில் சகோதரருடன் வேலை செய்து கொண்டிருந்தபோதே திடீரென்று மயங்கி விழுந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

உடனடியாக அவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றபோதிலும் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். (ம -60)

## நாட்டை...

நாடு தற்போது காணப்படுகின்ற நிலைமைக்கு மத்தியில், கட்டுப்பாடுகளை விதிப்பதற்கான தேவை கிடையாது எனக் கூறுகின்றார்.

எனினும், சுகாதார வழிகாட்டிகளை பின்பற்றுதல் மற்றும் பூஸ்டர் தடுப்பூசியை செலுத்திக் கொள்வதன் ஊடாகவே கோவிட் - 19 சவாலை வெற்றிகொள்ள முடியும் என தெரிவித்துள்ளார். (ம)

## எல்லேவலயில்...

மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

மாத்தறையில் இருந்து குறித்த பகுதிக்கு பிரவேசித்தவர்களே இவ்வாறு உயிரிழந்ததாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அவர்களது சடலங்களை பொலிஸார் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து மீட்டுள்ளதாகவும் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ம)

## யாழில் 22...

ளம் காணப்பட்டுள்ளனர்.

தொற்றாளர்கள் அனைவரும் யாழ். போதனா வைத்தியசாலை ஊடாக பிசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## ஜனாதிபதி...

கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற 74ஆவது தேசிய சுதந்திர தின நிகழ்வில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச ஆற்றிய உரை தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர்கள் மேற்கண்டவாறு கூறினர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது,

அபிவிருத்தி என்று கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்த கோட்டாபய தலைமையிலான அரசு நாட்டை நாசமாக்கிக்கொண்டிருக்கின்றது.

பொய்யான வாக்குறுதிகளை வழங்கி அரியணை ஏறிய ஜனாதிபதி கோட்டாபய, இன்று தப்பிப் பிழைப்பதற்காக மூவின மக்களையும் ஏமாற்றும் விதத்தில் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார்.

மூவின மக்களையும் பிரித்து அதில் சுயலாப அரசியல் தேடுவதிலேயே இந்த அரசு குறியாகவுள்ளது.

ஜனாதிபதியின் சுதந்திர தின உரை வேடிக்கையாக உள்ளது. மக்களுக்கான உரிமைகளைத் தட்டிப் பறித்துவிட்டு அவர்களைப் பொறுப்புடன் நடக்க வேண்டும் என்று ஜனாதிபதி கூறுகின்றார். இது எந்த வகையில் நியாயமானது?

அடிமை வாழ்க்கை வாழ இந்த நாட்டு மக்கள் எவரும் தயாராகவில்லை. இந்த அரசை வீட்டுக்கு அனுப்புவதே மக்களின் விருப்பம். அதை மக்கள் விரைவில் செய்வார்கள் என்றனர். (ம)

## இந்திய...

கோரியும் வடமராட்சி மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களைத் தடுக்க கடற்படை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

இந்நிலையில், குறித்த விடயம் தொடர்பில், கடற்படை பேச்சாளர் கப்டன் இந்திக டி சில்வாவிடம் கொழும்பு ஊடகம் ஒன்று கேள்வி எழுப்பியபோது இதனைத் தெரிவித்தார்.

இதன்போது பதிலளித்த அவர்,

இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறும் பகுதிகள் தொடர்பான கண்காணிப்புகளின் அடிப்படையில், அந்தப் பகுதிகளில் கடற்படை படகுகள் கண்காணிப்பில் ஈடுபடுவதாகக் குறிப்பிட்டார்.

எவ்வாறிருப்பினும், சில சில இடங்களில் அவர்கள் ஊடுருவ முடியும்.

இது கடற்படைக்கு அப்பால், இராஜதந்திர ரீதியிலான பிரச்சினையாகும் என்று கடற்படை பேச்சாளர் கப்டன் இந்திக டி சில்வா தெரிவித்துள்ளார். (ம)

## அரசியல்...

ராமநாயக்கவுக்கு ஜனாதிபதியால் பொது மன்னிப்பு வழங்கப்படாமை தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"ரஞ்சன் ராமநாயக்க பலருக்கு நல்லவராக இருக்கலாம். ஆனால், அவர் இழைத்த குற்றத்துக்காகச் சட்டம் அவரைத் தண்டித்துள்ளது. சஜித் அணியினரின் விருப்பத்துக்கிணங்க அவரைப் பொதுமன்னிப்பில் விடுவிக்க முடியாது. அதற்கான நடைமுறைகள் உள்ளன" என்றார். (ம)

## வீடு...

களவாடப்பட்டுள்ளன.

வீட்டில் உள்ளவர்கள் நேற்றைய தினம் யாழ். மாநகர முதல்வரின் திருமணச் சடங்கிற்கு சென்றுவிட்டு வீட்டிற்கு வந்து பார்த்தவேளை நகைகள் களவாடப்பட்ட விடயம் தெரிய வந்துள்ளது.

அதனைத்தொடர்ந்து வட்டுக்கோட்டைபொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-104)

## இரு...

நகரவேண்டும். மாறாக இருப்பதையும் இழக்கும் விதத்தில் செயற்படக்கூடாது."

இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணி, ஜனநாயக மக்கள் முன்னணி ஆகியவற்றின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் மனோ கணேசன் எம்.பி. மேலும் தெரிவித்ததாவது,

"இந்த நாட்டிலே விடயம் புரியாத நபர்கள் பலர் தெற்கிலும் உள்ளனர். வடக்கிலும் வாழ்கின்றனர். தெற்கில் உள்ள நபர்களில் ஜனாதிபதி முதன்மையானவர். அவரின் சுதந்திர தின உரையை செவிமடுக்கையில் சிரிப்புத்தான் வந்தது. (ம)

## மீனவர்களின்...

பெற்றது. அதன் பின் கருத்து தெரிவித்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

சகதமிழ் அரசியல் கட்சிகள் மக்களை குழப்பியுள்ளதாகவும் மக்களின் பிரச்சினையை தீர்க்ககூடாது என்பதுதான் அவர்களுடைய உள்நோக்கம் எனவும் குறிப்பிட்டார். இவ்விடயத்தை புரிந்து கொண்ட வட மாகாண கடற்றொழிலாளர்கள் தனது வாக்குறுதியை அடுத்து, போராட்டத்தை கைவிட்டு தொழிலுக்கு சென்று விட்டதாகவும் தெரிவித்துள்ளார். (ம)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

### ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 05/02/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1207
வெற்றி இலக்கங்கள்: மிதுனம் 3 6 6 7 6 8

### மெகா பவர்
திகதி 05/02/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1017
K 13 06 19 21 28
மெகா அதிர்ஷ்ட இலக்கம் 08908

### HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2022.02.05
சீட்டிழுப்பு இலக்கம் 010
துலாம் 43 44 47 62 துலாம்

### மஹஜன சம்பத
திகதி 2022/02/05
சீட்டிழுப்பு இலக்கம் 4669
F 1 9 8 2 1 8

### கொவிசெத
சீட்டிழுப்பு திகதி 05.02.2022
சீட்டிழுப்பு இலக்கம் 2964
C 07 14 70 75

### தன நிதானய
திகதி -2022.02.05
சீட்டிழுப்பு இலக்கம் - 699
T 06 18 59 64

### சனிதா
சனிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.02.05
சீட்டிழுப்பு இல : 3807
ரூ.4,613,160/-
வெற்றி இலக்கங்கள் 07 17 36 48 A

### அத கோடிபதி
சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1473
சீட்டிழுப்பு திகதி: 2022.02.05
ரூ. 5,151,280/-
16 29 71 72 M

### SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1646 | நிறம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 05.02.2022 | தினம் சனி
E 25 39 54 71
அடுத்த சுப்பர் ஜக்பொட் :- 57,912,797/=

### සංවර්ධන වාසනාව
திகதி : 2022-02-05
வெற்றி வாரம் : 483
ரூ. 13,274,996/-
P 53 45 60 9
ரூ. 2,031,540/-
ரூ. 13,378,292/-

### ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,000,000/=
திகதி 05.02.2022
வெற்றி வாரம் 3358
வர்ணம் இள நீலம்
வெற்றி இலக்கங்கள் 09 18 19 61 கும்பம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,442,160/=

### 12
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Y 19 03 51 61 63
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 210,362,725/-
சீட்டிழுப்பு வாரம் 822
சிவப்பு
2022.02.05 சனிக்கிழமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8,205 டெங்கு தொற்றாளர்கள் 2022ஆம் ஆண்டு அடையாளம்

இந்த ஆண்டின் பெப்ரவரி 4 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் நாட்டில் 8205 பேர் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு குறிப்பிடுகின்றது.

கடந்த ஜனவரி மாதத்தில் 7702 பேரும் இம்மாதத்தில் 503 பேரும் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளனர் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

இந்த ஆண்டில் டெங்கு காய்ச்சலுக்கு உள்ளானவர்களில் அதிகமானோர் கொழும்பு மாவட்டத்திலேயே இனங் காணப்பட்டுள்ளனர்.

இதில் கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் மாத்திரம் 664 பேர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர். (ம)


## வேலையாட்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் பிரபல சைவ உணவகத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

1. தோசை தயாரிப்பவர்
2. கொத்துரொட்டி, பிரைட் ரைஸ் தயாரிப்பவர்
3. யூஸ் தயாரிப்பவர்
4. சமையலறை உதவியாளர் (பெண்)
5. சுத்திகரிப்பாளர் (பெண்)
6. பில் போடுவர் ஆண்/பெண் (10070)

தொடர்பு:- 076 166 1986

## Easy Way To CANADA

Analyzed, Interviewed and Visa Applications submitted by Lawyers in Canada.



1) Work Visa
2) Education for Kids (5 - 17 Years)

(C-3714)

Visa Consultancy Service

134, Adiyapatham Road, Thirunelvely. T.P:-0770385584

## தீபம் கல்வி நிலையம்

(இல.11, டேவிட் வீதி, யாழ்ப்பாணம்)

கல்வியாண்டு - 2022

தரம் 6

தரம் 6 முதல் O/L மற்றும் A/L வரை தமிழ், ஆங்கில மொழிமூல வகுப்புகள்

ஆரம்பம்:- 05.02.2022 (சனி மாலை 4 மணி)

தொடர்புகளுக்கு - 077 224 7781

'தீபம் எம் பிள்ளைகளின் எழுச்சிமிகு எதிர்காலம்' (10012)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் அச்சுவேலி பத்தமேனியில் 20 பரப்புக் காணி பத்து பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

**1 பரப்பின் விலை 320,000/=**

15 அடி பாதையுடன் அச்சுவேலியிலிருந்து பலாலி செல்லும் வீதியில் தோலகட்டி கம்பனிக்கு முன் வீதி

(அச்சுவேலி பஸ் நிலையத்திலிருந்து 2 km தூரம்) (10022)

076 890 9259, 077 015 0353

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பலாலி றோட் புன்னாலைக்கட்டுவன் சந்தியிலிருந்து புத்தூர் செல்லும் பிரதான வீதியில் இரண்டாவது காணி 2 பரப்பாகவும் 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 17 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

புன்னாலைக்கட்டுவன் சந்தியிலிருந்து 2 1/2 km தூரம்
நல்ல சூழல், 1 பரப்பின் விலை
பத்து இலட்சம், ஒன்பது இலட்சம், எட்டு இலட்சம் (10073)

☎- 077 623 4204

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நுணாவில் வைரவர் கோயில் சந்தியில் இருந்து மட்டுவில் செல்லும் பிரதான வீதி முகப்புடன் 14 பரப்புக் காணி (நிலப்பரப்பு) 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

(A9 வீதியிலிருந்து 150m தூரத்தில்) (10022)

077 288 0152/077 911 6983
076 658 3621

## சிறுநீரகம் தேவை

O, B இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை. (10072)

தொடர்பு

076 239 9874

## வாகனம் தேவை வாடகைக்கு / விலைக்கு

அலுமினிய பொடி உள்ள பட்டா அல்லது ISUZU ரக வாகனம் விலைக்கு / வாடகைக்குத் தேவை. (10060)

077 900 9541

## வேலையாள் தேவை

பண்ணை வேலை அனுபவம் உள்ள ஆண் வேலையாள் தேவை. உணவு, தங்குமிட வசதி உண்டு. (C-3711)

தொடர்பு

077 616 4559

## கொழும்பு விலையில் யாழ்ப்பாணத்தில்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பொருட்களை பெற்றுக் கொள்ளலாம்.

பிளாஸ்டிக் பொருட்கள், சில்வர் வகைகள், பாட்டா வகைகள், தையல் உபகரணங்கள், நவீன வட்டின்கள், பொம்மை வகைகள், மாஸ்க் வகைகள், சனிரேசர் வகைகள், விளையாட்டுப் பொருட்கள், கவரிங் நகைகள், அன்பளிப்புப் பொருட்கள் இவை அனைத்தும் கொழும்பு விலையில் பெற்றுக் கொள்ளலாம். (10022)

26/1, ஜும்மா பள்ளிவாசல் வீதி, யாழ்ப்பாணம்.
077 468 3354

தே. கலைத்தாசன் (கரன்)
உரிமையாளர்,
சரவணபவன் பான்சி ஹவுஸ்

## வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்

தரம் 10, தரம் 11 மாணவர்களுக்கான வகுப்புகள் Zoom மூலமாக நடைபெறுகின்றது.

ஆசிரியர்:- P.சசீகரன் (10045)

076 646 3860

## SPOKEN ENGLISH

குறுகிய காலத்தில் ஆங்கிலத்தில் பேச, எழுத, வாசிக்க அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும்.

- IELTS (students visa)
- IELTS LIFE SKILLS A1 (London)

நேரடியாகவும் online மூலமாகவும் நாட்டின் எப்பகுதியிலிருந்தும் கற்கலாம். 072 267 6713

## Spoken English Personal Classes

3 மாதத்தில் ஆங்கிலம் சரளமாகப் பேசக் கற்பிக்கப்படும்.

T.P - 077 948 5703

## மணமகள் தேவை

1977, இந்து கௌரவ குடும்பம். திருவோண நட்சத்திரம், 56 ½ கிரக பாவம் உடைய அரச உத்தியோக மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை. (10026)

077 728 6050

## துயர் பகிர்கின்றோம்



யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கத்தின் முன்னாள் செயலாளர் மதிப்பிற்குரிய

**இராமலிங்கம் சபேசன்**

காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர் சபையினரும் செயலாளரும் நிர்வாகத்தினரும்
யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கம்
இல. 530, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (10051)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் வசாவிளான் கிழக்குப் பகுதியில் கார்பெட் வீதி அருகில் 33 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. 2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.

தொடர்பு (9992)

076 449 4166
074 141 9820

## காணி விற்பனைக்கு

முல்லைத்தீவு, கொக்கிளாய் மேற்குப் பிரதேசத்தில் பாடசாலை, வைத்தியசாலை அமைந்துள்ள நடுப்பகுதியில் 12 பரப்பு வெற்றுக் காணி உடன் விற்பனைக்குண்டு.

(விலை பேசித் தீர்மானிக்கலாம்) (C-3710)

தொடர்புகளுக்கு:-

077 656 9428

## உடனடி வேலைவாய்ப்புகள்

**1. களஞ்சிய காப்பாளர்**

கணனி அறிவுள்ள 35 வயதிற்கு மேற்பட்ட களஞ்சிய காப்பாளர் தேவை.

**2. கணனி அறிவுள்ள பெண்கள் தேவை**

களஞ்சிய கணக்கு பதியவும், சரிபார்க்கவும் கணனி அறிவுள்ள பெண்கள் தேவை.

**3. வாகன உதவியாளர்கள் தேவை**

வாகனத்தில் பொருட்களைக் கொண்டு சென்று இறக்குவதற்கும் காசு சேகரிப்பதற்கும் வேலையாட்கள் தேவை.

**4. வாகன ஓட்டுனர்கள் தேவை**

AD வாகன சாரதி அனுமதிப்பத்திரம் உள்ள சாரதிகள் தேவை. (வினியோக வாகனங்களுக்கு) (10059)

கொக்குவில், திருநெல்வேலி, கோண்டாவில், ஆவரங்கால், அச்சுவேலி, புத்தூர் ஆகிய அண்மித்த இடங்களில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:- 077 009 0189

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK-975/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-3679)

0768226240 DHL

## கனடாவில் வேலைவாய்ப்பு WORK PERMITS

தகுதிகள்:- A/L PASS / DIPLOMA / DEGREE ஆங்கில அறிவு



அனைத்து துறைகளிலும் அனுபவம், அறிவு, ஆங்கிலப்புலமை உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்புக்கள்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்.

0777-968-777


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.02.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka
விலை : 30.00
வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்

நாதம் 330
Viber 076 636 3378
வள்ளுவர் ஆண்டு 2053 06.02.2022 தொலைபேசி : 021 222 3378

## பெப்ரவரி - 04 தமிழினத்தின் கரிநாள்





## கட்டுக்கடங்காத மீனவர் போராட்டம்



உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது.

மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். எங்களின் அன்புக்கும் மரியாதைக்குமுரிய சுப்பிரமணியம் பழனிவேல்பிள்ளை அவர்கள் பிரான்ஸில் காலமானார்.

மண்டைதீவு- வேலணையைச் சொந்த இடமாகக் கொண்ட பழனிவேல்பிள்ளை அவர்கள் யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியிலும் உயர் தொழில்நுட்ப நிறுவகத்திலும் வருகைதரு விரிவுரையாளராகக் கடமையாற்றியவர்.

எதையும் நியாயத்துவமாகச் செய்ய வேண்டுமென்ற உயர்ந்த சிந்தனை கொண்ட பழனிவேல்பிள்ளை அவர்களின் மறைவுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவம் எனக் கூற, அனைவரும் மீண்டும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் நிலவிய மௌனத்தைக் கலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியில நடந்ததைப் பாருங்களன்.

இந்துப் பாடசாலைகள் தங்கட இந்து நடைமுறைகளைப் பின்பற்ற முடியாமல் இருக்கிறது என்பதற்கு இதைவிட்ட உதாரணம் வேறு எதுவுமில்லை.

**கங்காணி:** அதெண்டால் உண்மைதான். சில மதப் பின்னணி கொண்ட பாடசாலைகளில சரஸ்வதி பூசை இடம்பெறுவதில்லை. ஆனால் இந்துக் கல்லூரிகளில எல்லா மத நிகழ்வுகளும் நடக்குது.

அதுமாதிரி இஸ்லாமியப் பாடசாலைகளில இஸ்லாமிய நடைமுறைகள் அந்தப் பாடசாலை முழுவதிலும் பிரதிபலிக்கும்.

அங்க, இந்து நடைமுறைகள் எதனையும் பின்பற்ற முடியாது.

ஆனால் இந்துப் பாடசாலை எண்டால் எல்லாத்துக்கும் ஆட வேணும்.



## பூஸ்டர் மருந்து போட்டால் கேதீச்சரம் செல்லலாமே!

**வாத்தியார்:** இந்துப் பாடசாலை நிர்வாகம் மிகவும் இறுக்கமாக இருந்தால், இந்துப் பண்பாட்டைப் பின்பற்ற முடியும். கொழும்பில நாலந்தா-ஆனந்தா போன்ற இந்த நாட்டின் பிரபல பாடசாலைகளில பௌத்த சிங்களம் தவிர்ந்த ஏனைய மாணவர்கள் சேர முடியாது.

ஆனால் இஞ்ச இந்துக் கல்லூரி, இந்து மகளிர் கல்லூரி எண்டிருக்கும். ஆனால் இஸ்லாமிய மாணவர்களும் சேரலாம். கிறிஸ்வ மாணவர்களும் கற்கலாம் எண்டால் 'இந்து' என்ற பதத்தை இழந்துதானே ஆக வேணும்.

**மூப்பர்:** இப்பதானே எல்லாக் கல்லூரிகளும் தேசிய பாடசாலை எண்டு பெயர்ப்பலகை போடுகினம்.

மாகாணப் பாடசாலைகளைத் தேசிய பாடசாலைகளாக ஆக்கினதில எங்கட கல்லூரிச் சமூகங்கள் அடைந்த ஆனந்தத்திற்கு அளவே இல்லை.

என்ன செய்யிறது மாகாணத்திற்குட்பட்ட பிரபலமான பாடசாலைகள் எல்லாம் தேசியப் பாடசாலைகளாக மாறிவிட்ட பின்பு, மாகாணக் கல்வி அமைச்சு என்ன செய்ய முடியும்.

**விதானையார்:** எங்கட வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு ஒழுங்காக இயங்கிறதை விரும்பாத ஆளுநர் தரப்பு, இருக்கிற எல்லாப் பாடசாலைகளையும் தேசியப் பாடசாலையாக ஆக்கி விட்டுத்தான் போகும் போல.

**சிறாப்பர்:** இது தொடர்பில எங்கட அரசியல்வாதிகள் என்ன செய்யினம்.

மாகாணப் பாடசாலைகள் தேசியப் பாடசாலைகளாக உருமாறுவதால ஏற்படக் கூடிய அதிகார இழப்பு, உரிமைக் குறைப்புப் பற்றி எங்கட தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் வாய் திறக்க மாட்டினம்.

பிறகு எங்கட உரிமை - எங்கட அதிகாரமெண்டு பண்டார வெடி வைப்பினம்.

**பண்டிதர்:** அதுசரி மகா சிவராத்திரி விரதத்திற்கு திருக்கேதீச்சரத்திற்குப் போறவியள் கட்டாயம் பூஸ்டர் ஊசி போட்டிருக்க வேணுமெண்டும் பூஸ்டர் மருந்து ஏற்றாதவர்களை திருக்கேதீச்சர ஆலயத்திற்குச் செல்ல அனுமதிக்க மாட்டாது எண்டும் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கூறியிருக்கிறாராம்.

**விதானையார்:** என்ன? பூஸ்டர் மருந்து போட்டால் தான் திருக்கேதீச்சரத்திற்குப் போகலாமோ. இந்தச் சட்டம் சைவ ஆலயங்களுக்கும் சைவ மக்களுக்கும் மட்டுமோ உரியது.

கண்டி தலதாமாளிகைக்குப் போறதெண்டால், மடு தேவாலயத்தை தரிசிப்பதெண்டால், பள்ளிவாசலில தொழுகை நடத்திறதெண்டால் அவையள் பூஸ்டர் மருந்து போடத் தேவையில்லை. அதுபற்றி பார்வையிடவும் மாட்டாது.

ஆனால் மன்னார் திருக்கேதீச்சரத்தில சிவராத்திரிக்குப் போறதெண்டால், பூஸ்டர் மருந்து போட்டிருக்க வேண்டுமென்று கூறுவது, மன்னார் சுகாதார சேவைகள் பணிப்பாளரும் சைவ சமயத்திற்கு எதிராகச் செயற்படுகிறார் என்பதைத்தான் சுட்டி நிற்கிறது.

**சாத்திரியார்:** பொதுத் தேர்தலில கத்தோலிக்க வேட்பாளர்களை ஆதரிக்க வேண்டுமென்று மன்னார் மக்களிட்ட கோரிக்கை வைத்து அறிக்கை விட்ட, திருக்கேதீச்சர ஆலயத்தின்ர இந்த நிர்வாகம் இருக்கும் வரைக்கும் திருக்கேதீச்சரத்தானுக்கு கும்பாபிஷேகமும் நடக்கப் போறதில்லை. நுழைவாயில் வளைவும் அமையப் போவதில்லை.

இதோட இப்ப பூஸ்டர் போடாவிட்டால், சிவராத்திரியும் இல்லை எண்டாச்சுது.

இவ்வாறு சாத்திரியார் சதாசிவம் கூற, அதனை ஆமோதிப்பது போல ஆலடிப்பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லை தாண்டுபவரை தடுப்பது யார்?

எல்லை எனும் சொற்பதமே பிரச்சினைக்குரிய சொல் என்பதை எவராலும் மறுத்து விட முடியாது. அந்தளவிற்கு எல்லை வேலிகள் எம் சமூகத்தில் புரையேறிக் கிடக்கின்றன.

இந்த எல்லை பிரச்சினைகள் பல சந்தர்ப்பங்களால் உயிர் பறிபோகும் சோகமும் நிகழ்ந்து விடுகின்றன.

ஆனால் நாம் இங்கு பிரஸ்தாபிக்கும் எல்லை என்பது இரு வீட்டுக்கு இடைப்பட்ட எல்லை எனும் எல்லையைத் தாண்டி இரு நாடுகளுக்கு இடையிலான எல்லை என்பதையே.

> **“இந்திய-ஈழத்தமிழர் உறவில் எல்லை தாண்டல் என்பது விரிசலை ஏற்படுத்த இடம் தரக் கூடாது. அவ்வாறு அமையுமாயின் அது ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம் என்பது போல ஆகி விடும்”**

நாடுகளுக்கிடையிலான எல்லை என்பது மிக முக்கியம் வாய்ந்த ஒன்று. அத்துடன் அதன் பாதுகாப்பு விடயத்தில் அந்தந்த நாடுகள் மிகத் தீவிரமான கண்காணிப்பில் இருந்தே ஆக வேண்டும்.

ஒரு நாட்டின் எல்லைகளை இறுக்கமாகவும் பாதுகாப்பாகவும் வைத்திருப்பதென்பது அந்தந்த நாடுகளின் பாதுகாப்பில் மிக முக்கியமான ஒன்றாக கருதப்படுகின்றது.

மேலைத்தேய நாடான பெல்ஜியம் மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளுக்கிடையிலான எல்லைகள் வெறும் வெள்ளைக் கோடுகளால் மாத்திரம் பிரிக்கப்பட்டவை என்றால் உங்களால் நம்ப முடியுமா? ஆனால் நம்பித்தான் ஆக வேண்டும்.

பெர்லி நகரம் நெதர்லாந்திற்கும் பெல்ஜியத்திற்கும் இடையில் உள்ளது. இந்த நகரமே இரு நாடுகளையும் பிரிக்கும் எல்லைகளாகவும் உள்ளது.

இரு நாடுகளின் எல்லைக் கோட்டை இடும் போது வீடுகள், பாரிய வணிக வளாகங்கள் என்பன இரண்டாக பிரிக்கப்பட்டிருந்தாலும் இது வெறும் கோடுகளாகவே காணப்படுகின்றன.

இங்கு சில வீடுகளின் படுக்கை அறைகள் கூட இரு நாட்டு எல்லைக் கோடுகளால் பிரிக்கப்பட்டுள்ளன. என்பது மிகவும் வியக்கத்தக்க விடயம்.

ஆனாலும் இரு நாடுகளும் தங்கள் எல்லைகளில் பெரும் பாதுகாப்பு பலத்தை கொட்டி தமது நாட்டின் பொருளாதாரத்தை முடக்க எத்தணியாமல் மிக அன்னியோன்னியமாக இரு நாட்டு எல்லைகளையும் பகிர்ந்து கொள்கிறார்கள்.

இதனால் படைக்குவிப்போ, பாதுகாப்பு நடவடிக்கைகளோ, பண இழப்புக்களோ, உயிரிழப்புக்களோ எவையும் இல்லாமல் இயல்பில் இரு நாடுகளும் சுற்றுலாப் பயணிகளின் வருகையினால் திக்குமுக்காடி நிற்கின்றன.

இந்த விசித்திரம் இன்னும் பல நாடுகளில் இருக்கின்ற போதிலும் அது தொடர்பில் பெரிதாக அலட்டிக் கொள்ளாமல் நாம் விடயத்திற்கு வருவோம்.

ஈழத்தமிழர்-இந்திய உறவென்பது இன்று நேற்று வந்த சொந்தமல்ல அது காலாதிகாலம் பேணப்பட்டு வந்த உறவு.

வெறுமனே உறவு என்பதிலும் இதிகாச புராணங்களினூடேயான தொடர்புகளே இந்திய-இலங்கை உறவை பலப்படுத்தி நிற்கின்றன.

சீதையைக் கவர்ந்த இராவணனிடம் இருந்து சீதையை மீட்க இராமபிரான் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பாலமமைத்து வந்ததாக கூறுகிறது இராமாயண புராணம்.

இந்தப் பாலமே சேது பாலம் என வர்ணிக்கப்படுவதுடன் இன்று வரை அந்த நிலப்பரப்பின் கடலடி ஆழம் வெறும் 10-12 மீற்றர் என்பது அந்த உறவின் ஆழத்தை இன்னும் இறுகப்பற்றி வைத்துள்ளது புலனாகிறது.

மிகக்குறுகிய சில கடல் மைல் தூரங்களைக் கொண்ட இந்தியா-தலைமன்னார் எல்லைகளை மட்டுப்படுத்தி அதில் மீன்பிடியில் ஈடுபடுவதென்பது சர்வ சாதாரணமான விடயம் அல்ல.

ஆனாலும் இந்திய மீனவர்கள் அத்துமீறிய வருகை கடந்த பத்து ஆண்டுகளை விட தற்போது மிகக் கடுமையாக உள்ளதை நாம் ஏற்றுத்தான் ஆக வேண்டும்.

இங்கு தான் ஏன் இந்த எல்லை தாண்டல் பிரச்சினை வருகின்றது என்பதை நாம் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

இந்திய மீனவர்களின் மீன்பிடி முறையினாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது என்பதை கடல் சார் ஆய்வாளர்கள் பல முறை உறுதிப்படுத்தி உள்ளனர்.

ஆம், இந்திய மீனவர்களின் மீன்பிடி முறை மிகவும் அழிவை ஏற்படுத்தவல்ல மடிவலை போன்ற மீன்பிடி முறையாகும்.

இம்முறையினால் கடலில் உள்ள மீன் இனங்கள்



ஒட்டு மொத்தமாக அழிவடைவதுடன் மீன் இனங்களின் வாழ்விடங்கள், இனப்பெருக்க முறைமை எனும் கட்டமைப்புக்கள் முழுவதுமாக சிதைக்கப்படுகின்றன.

இதே முறையில் கடந்த பல தசாப்தங்களாக மீன்பிடியில் ஈடுபட்டதால் இந்திய கடல் எல்லையில் மீன் வளம் வெகுவாக குறைவடைந்துள்ளது. இதனாலேயே இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்கின்றது என்ற அனுமானத்திற்கு நாம் வர முடியும்.

அத்துடன் இந்திய மீனவர்களின் ரோலர் படகுகள் ஈழத்து மீனவர்களின் வலைகளையும் கப்பல்களையும் சேதப்படுத்தி வருகின்றமை இங்கு கவனிக்கத்தக்க விடயம்.

இந்நிலையிலேயே கடந்த 31 ஆம் திகதி வடமராட்சி மீனவர்களுக்கும் இந்திய மீனவர்களுக்கும் இடையே கடல் நடுவே முறுகல் நிலை ஏற்பட்டது.

இந்த முறுகல் நிலையை அடுத்து தமிழக மீனவர்களினால் ஈழத்து மீனவர்கள் மீது பெற்றோல் குண்டு வீசப்பட, மீனவர்களின் போராட்டம் உக்கிரம் பெறத் தொடங்கியது.

மீனவர்களின் போராட்டத்தின் விதை வடமராட்சி சுப்பர்மடம் பகுதியில் விதைக்கப்பட்டது.

சுப்பர்மடம் பகுதியில் பருத்தித்துறை-பொன்னாலை வீதியை வழி மறித்து மீனவர்கள் வீதிமறியல் போராட்டத்தை தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்த நிலையில் கடந்த வியாழக்கிழமை அப் போராட்டத்திற்கு பருத்தித்துறை நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்திருந்தது.

குறித்த மீனவர்களின் போராட்டமானது வெறுமனே சுப்பர்மடம் பகுதியில் மாத்திரம் நின்று விடாது.

யாழ்ப்பாணத்தில் A9 வீதியை முடக்குமளவிலும் பாரிய ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்.

அத்துடன் மருதங்கேணி, பருத்தித்துறை பிரதேச செயலகங்களை முற்றுகையிட்டு மீனவர்கள் பெரும் ஆர்ப்பா ட்டங்களில் குதித்திருந்தனர்.

இதன் விளைவு மீனவர்களின் பிரச்சினையைத் தீர்க்க தமிழகம் வருமாறு மக்கள் பிரதிநிதிகளுக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்ராலின் அழைப்பு விடும் அளவிற்கு அதிர்வை ஏற்படுத்தியிருந்தது.

இங்கு தான் எமது தமிழ் அரசியல் தலைவர்களின் இராஜதந்திர பஞ்சம் புரிகிறது.

இலங்கை-இந்திய கடல் எல்லையாக இருந்தாலும் இங்கு முட்டி மோதுவது தமிழ் மீனவர்களே.

அதிலும் இலங்கை அரசின் தமிழினத்தின் மீதான அட்டூழியங்களை தட்டிக் கேட்க பெரும் அறவழிப் போரைத் தொடுத்த தமிழகத்தைச் சேர்ந்தவர்களுடன் ஈழத்து மீனவர்களை முடைந்துவிடுவதனூடே தனது காயை மிகச் சிறப்பாக நகர்த்திக் கொண்டிருக்கிறது இலங்கை அரசு.

ஆனால் எம் தமிழ் அரசியல்வாதிகள் இது விடயத்தில் பெரிதாக அலட்டிக் கொள்ளாமல் இருப்பது வேடிக்கைக்குரியது.

அத்துடன் எல்லை தாண்டும் தமிழக மீனவர்கள் என அடை மொழிப்படுத்தப்பட்டிருந்தாலும் பெரும்பாலும் அவர்கள் பெரும் பணம் படைத்த முதலைகளிடத்தே நாட் கூலிக்கு வேலை செய்பவர்களாகவே காணப்படுகின்றனர்.

எல்லை தாண்டும் மீனவர்கள் பிரச்சினை என்பது பேசித் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை.

மிக நீண்ட காலமாக ஈழத்து மீனவர்களின் கோரிக்கைகளை எவரும் செவிசாய்க்காமல் இருந்து விட்டு அவர்களின் பிரச்சினை முளையிலேயே கிள்ளி எறியாமல் இப்போது அது பெரிதாய் முத்தி வெடித்த பின்பு பேசி பயன் ஏது?

இந்திய-ஈழத்தமிழர்களின் உறவில், எல்லை தாண்டல் என்ற கோடு விரிசலை ஏற்படுத்துவதற்கு எவரும் இடம் கொடுக்கக்கூடாது. அவ்வாறு கொடு ப்போமாக இருந்தால் அது ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்ற சொற்பதத்திற்கு ஒப்பானதாகி விடும் என்பதை நாம் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

**அபிமன்யு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

# கம்பராமாயணம்

## பால காண்டம் 06

அனுமன் காற்றின் மைந்தன்; எனினும் சிவனின் சீற்றமும் ஆற்றலும் வீரச் செயலும் அனுமன்பால் அமையும் என்று அறிவிக்கப்பட்டது.

தெய்வ நகர்களில் தேவர்களும் தெய்வங்கள் மூவரும் முன் பேசிய பேச்சுரைகள் இப்பொழுது செயற்படும் காலம் வந்து விட்டது என்பதை வசிட்டர் உணர்ந்தார். திருமால் தசரதன் மகனாய்ப் பிறப்பார் என்பதை அறிந்து செயற்பட்டார்; மகனை நல்கும் வேள்வி செய்விக்க வழி வகைகளைக் கூறினார்.

வேள்விக்குரிய ஆசான் யார்? அவர் எங்கு இருக்கிறார்? எப்படி அவரை அழைத்து வருவது என்ற முறைகளைக் கேட்டுத் தசரதன் செயற்பட்டான். வேள்வி ஆசான் அதற்குத் தகுதி கலைக் கோட்டு மாமுனிவர்க்குத்தான் உளது என்று வசிட்டர் அறிவித்தார். அவரை ருசிய சிருங்கர் என்றும் கூறுவர்.

அவர் அங்க நாட்டில் தங்கி இருக்கிறார் எனவும், உரோம பாதர் அந்நாட்டு அரசன் எனவும், அவர் தம்மகளை இம் முனிவருக்கு மணம் முடித்துத் தம் அரண்மனையில் மருமகனாய் இருக்க வைத்திருக்கிறார் எனவும் தெரிவிக்கப்பட்டன.

"அங்க நாட்டிற்கு அக்கலைகோட்டு மாமுனிவர் செல்லக் காரணம் யாது?" என்று தசரதன் வினவினான்.

கலைக்கோட்டு மாமுனிவர் வரலாறும் அழைப்பும்.

அங்க நாட்டில் தொடர்ந்து மழை பெய்யாமல் பொய்த்துவிட்டது. பஞ்சமும் பசியும் மக்களை அஞ்ச வைத்தன. "நல்லார் ஒருவர் இருந்தால் அவர் பொருட்டு மழை எல்லார்க்கும் பெய்யும்" என்று கூறுவார்கள்.

எனவே நன்மை மிக்க அம்முனிவர் இருக்கும் இடம் நாடி அவரைத் தம் மண்ணை மிதிக்க வைத்தனர்.

கலைக்கோட்டு மாமுனிவர் விபாண்டன் என்னும் தவ முனிவரின் ஒரே மகன்; அவர் வெளியுலகப் பாதிப்புகள் இல்லாமல் வளர்க்கப்பட்டார்.

காட்டுச் சூழலில் தவசிகள் மத்தியில் வாழ்ந்ததால் நகர மாந்தர் தம் ஆசைகள் அவருக்கு அமையவில்லை. "சுத்தம் பிரமம்" என்று சொல்லத்தக்க நிலையில் ஞானியாய் வாழ்ந்து வந்தார். அவரை மயக்கி நகருக்கு அழைத்து வர அந்த நாட்டு நங்கையர் சிலர் முன்வந்தனர்.

அவர்கள் அரசன் உரோமபாதரிடம் "கலைக் கோட்டு முனிவனைத் தம்மால் அழைத்து வரமுடியும்" என்று உறுதி தந்திருந்தனர்; அவர்கள் ஆடல் பாடலில் வல்ல அழகியர்.

அரசனும் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டான்; கட்டற்ற செல்வத்தை அவர்களுக்கு வாரி வழங்கினான்; ஆடை அணிகள் தந்து, அவர்களைச் சிறப்பித்தனர். நாட்டை விட்டுக் காட்டை அடைந்த அக் காரிகையர், தூரிகையில் எழுதிய சித்திரங்கள்போல் அவன் முன் நின்றனர்.

(தொடரும்...)





## STARSHIP

**Starship** என்பது மனிதர்களை செவ்வாயில் குடியமர்த்தும் நோக்கத்திற்காக உருவாக்கப்பட்ட விண்கலம் ஆகும். இன்றைய உலகில் பல்வேறு துறைகளிலும் பல புதிய கண்டுபிடிப்புக்களை அறிமுகம் செய்கின்ற எலோன் மஸ்க் என்பவரின் **(Elom musk)** **"Space x"** நிறு வனத்தினால் இவ் விண்கலம் வடிவமைக்கப்பட்டது. இது ஒரே தடவையில் ஏறத்தாழ 100 பயணிகளை சுமந்து செல்லக் கூடியது.

இவ் விண்கலம் துருப்பிடிக்காத இரும்பினால் உருவாக்கப்பட்டுள்ளது. இது 160 அடி உயரம் கொண்டதாகவும் 30 அடி விட்டம் கொண்டதாகவும் காணப்படுகின்றது. இவ் விண்கலம் செவ்வாய்க் கிரகத்தை சென்றடைய கிட்டத்தட்ட நான்கு மாதங்கள் தேவைப்படும் என்பதனால் அவ்விண்கலத்தினுள் மக்கள் வாழ்வதற்கேற்ற பல்வேறு வசதி வாய்ப்புக்கள் செய்யப்பட்டுள்ளன. பயணிகளின் தேவைக்களுக்கேற்ப விண்வெளியை பார்த்து இரசிப்பதற்கான காட்சிக்கூடங்கள் **(Viewing Gallery)** பயணிகள் ஓய்வெடுக்கும் பொது அறை **(Common Room)** உடற்பயிற்சிக் கூடம் **(Gym)** உறங்கும் அறைகள் **(Sleeping Cabins)** குளியலறைகள், கழிப்பறைகள், கடும் கதிர் வீச்சுக்களிலிருந்து பயணிகளைப் பாதுகாப்பதற்கான பாதுகாப்பறைகள், **Radiation Shelter** மற்றும் சேமிப்பு அறைகள் **(Storage Rooms)** போன்ற பல்வேறுபட்ட வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும் இவ் விண்கலத்திற்குத் தேவையான மின்சக்தியை உற்பத்தி செய்வதற்கு இரண்டு சோலர் படல் **(Solar panel)** உம் அம் மின்சக்தியைச் சேமிப்பதற்காக இரண்டு மின்கல அறைகளும் **(Battery Rooms)** காணப்படுகின்றது. இதற்குப் பயன்படுத்தும் எரிபொருட்கள் திரவ மிதேனும் ($CH_4$) திரவநிலை ஒட்சிசனும் ($O_2$) ஆகும்.



**Starship** ஐ பூமியின் வளிமண்டலத்திற்கு அப்பால் செலுத்துவதற்கான செலுத்தியாக சுப்பர் கெவி **(Super heavy)** செயற்படுகின்றது. இதில் மிக வலுவான 33 செலுத்தி இயந்திரங்கள் **(Raptor Engines)** காணப்படுகின்றன. இச் சுப்பர் கெவியானது 230 அடி உயரமும் பயணத்திசையை மாற்றுவதற்கான நான்கு இறக்கைகளையும் கொண்டிருக்கிறது. இச் சுப்பர் கெவியானது Starship ஐ விண்வெளியினுள் செலுத்திய பின் மீண்டும் பாதுகாப்பாக தரையிறங்கக் கூடியது.

இவ் வருடம் (2022 இல்) இச் **Starship** ஐ சந்திரனில் தரை இறக்கம் செய்து பரீட்சிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இவற்றை நோக்கும் பொழுது நாடுகளுக்கிடையிலான பயணத்தையும் தொடர்பினையும் ஏற்படுத்தி உலகம் சுருங்கி விட்டதாகத் கருதிய மனிதன் எதிர்காலத்தில் கோள்களுக்கிடையிலான பயணத்தின் மூலம் முழு ஞாயிற்றுத் தொகுதியும் சுருங்கி விட்டதாக உணரும் கா-லம் வெகு தொலைவில் இல்லை என்பது தெளிவாகின்றது.

L.Kamshanth
JHC-10C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்றைய கவிஞர்கள் பெண்களை தமது கவிதையில் வர்ணிப்பது பற்றிக் கூறுங்கள் வியாசரே?

**ஆருஷ் — யாழ்ப்பாணம்**

**வாழ்க்கைக்கும் சினிமாவுக்கும் என்ன வித்தியாசம் வியாசரே?**

ஒரு மனிதனின் வாழ்வை வெறும் இரண்டு மணித்தியாலங்களில் காட்டி விடுகிறது சினிமா. ஆனால் அது வாழ்க்கை ஆகி விடாது. சினிமாவை பிரதிபலிக்கும் வாழ்வு என்பது நினைக்க அழகாக இருக்கலாம் ஆனால் நிஜத்தில் அது யதார்த்தமாக அமையாது.

கதாநாயகன் பத்து பேரை போட்டு புரட்டி எடுப்பதும் வீதியில் சர்வசாதாரணமாய் கொலை செய்து விட்டு சட்டத்தின் முன் தப்பித்துக் கொள்வதும் சினிமாவுக்கு பொருந்துமே தவிர வாழ்விற்கு கொஞ்சமும் பொருந்தி விடாது என்பதை புரிந்தால் வாழ்க்கை வேறு சினிமா வேறு என்பது புரிந்து விடும்.

**துசான் — மானிப்பாய்**

**நல்லவர் கெட்டவர் என்பதை எவ்வாறு இனங்கண்டு கொள்வது வியாசரே?**

நல்லது கெட்டது என்பது இந்த சமூகத்தின் செயற்பாட்டினூடே வருகிறது. உதாரணத்திற்கு. புகையிலையை எடுத்துக் கொண்டால் புகையிலைச்செடி பார்ப்பதற்கு பச்சைப்பசேல் என அழகாக சூழலுக்கு எவ்வித கெடுதியும் இல்லாமல் இருக்கிறது. அதை வெட்டி எடுத்து காய வைத்து பாடம் போட்டு அவித்து எடுத்ததும் அதன் தன்மையே மாறி மிகவும் ஆபத்து நிறைந்த பொருளாகி விடுகிறது.

இது போல தான் இந்த சமூகமும் வீழ்ந்தவனை தூக்கி விடாமல் ஏளனம் செய்து அவனைக் கொடூரனாக மாற்றி விடுகிறது. இதைப் புரியாத வரை நல்லவர்கள் கெட்டவர்களாக மாறிக்கொண்டே இருப்பர்.

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்து 74 ஆண்டுகள் ஆகி விட்டதாமே?**

அடக் கடவுளே 74 ஆண்டுகளா? நம்பவே முடியவில்லை. அது சரி இந்தச் சுதந்திரம் யாரால் யாருக்கு வழங்கப்பட்டது? என்ற சந்தேகம் எனக்கு இன்று வரை இருக்கின்றது.

இது இலங்கைத் திருநாடு இங்கு பௌத்த சிங்களவர்களே முதன்மையானவர்கள். இங்கு நாம் வைத்தது தான் சட்டம். இப்படிப் பேசும் பெரும்பான்மை ஆட்சியாளர்களுக்கு இது 74 ஆவது சுதந்திர தினமாக அமையும். ஆனால் சிறுபான்மை தமிழினத்திற்கு இன்னமும் சுதந்திரம் கிடைக்கவில்லை என்பதே உண்மை.




**அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**

**021 567 1532**

**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**சுதன் — குப்பிழான்**

**புலிகள் இல்லைத் தானே 13 உடன் நிற்போம் என தமிழ் அரசியல் கட்சித் தலைவர்கள் நினைக்கிறார்களா?**

தற்போதைய பேரினவாத அரசின் செயற்பாடு தமிழினத்தை அழிக்கும் செயற்பாடாய் இருக்கிறது. அதனால் முதலில் இந்தியாவால் அமுல்படுத்தப்பட்ட 13 ஆவது திருத்த சட்ட மூலத்தைப் பெற்றுக் கொள்வோம். அதன் பின் எமக்கான உரிமைகளை பெற்றுக் கொள்ள முயற்சிப்போம்.

தற்போதைய நிலையில் இருப்பதையும் இழக்கும் நிலையிலேயே நாடு இருக்கிறது என தெளிவுபடுத்தும் அவர்கள் 13 எமக்கான நிரந்தர தீர்வு இல்லை என்றும் தெளிவுபடுத்தியிருக்கின்றனர்.


**மகேஸ்வரன் — வரணி**

**இந்து ஆலயங்களில் நந்தியைப் போல பின் முதுகு காட்டிக் கொண்டு நிற்கிறீர்களே நேருக்குநேர்நின்றுபதில்அளிக்கலாம்தானே?**

நந்தி உங்களுக்கு பின்முதுகு காட்டிக் கொண்டு நிற்கிறதே தவிர உண்மை நிறைந்த இறைவனை நேருக்கு நேர் பார்த்தபடியே இருக்கின்றது என்பதை மறந்து விடாதீர்கள்.

எதுவும் பார்க்கும் பார்வையிலேயே இருக்கிறது. இறைவனைப் பார்த்துக் கொண்டிருக்கும் நந்தியின் பின் நீங்கள் நின்றால் உங்களுக்கு நந்தியின் பின்புறமே தெரியும் எனின் உங்களுக்கு பின் நிற்பவர்களுக்கு உங்கள் நிலை எப்படி இருக்கும் என்பதை உணர்ந்து கொள்கிறீர்களா?

இது தான் வாழ்வின் தத்துவம். இதைப் புரிந்து கொள்ளாத வரை குதர்க்கப் பேச்சு வந்து கொண்டே இருக்கும்.



இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்து 74 ஆண்டுகள் ஆகி விட்டதாமே?

**மதுவன் — மீசாலை**

**அன்றைய கவிஞர்கள் பெண்களை தமது கவிதையில் வர்ணிப்பது பற்றிக் கூறுங்கள் வியாசரே?**

...அன்னத்தை தொட்ட கைகளினால் மது கிண்ணத்தை இனி நான் தொட மாட்டேன்

ஒரு பெண்ணைப் பார்த்து நிலவைப் பார்த்தேன் நிலவில் ஒளியில்லை...

ரோஜா மலரே ராஜ குமாரி ஆசை நிலவே அழகிய ராணி அருகில் வரலாமா...

காலங்களில் அவள் வசந்தம் கலைகளிலே அவள் ஓவியம் மாதங்களில் அவள் மார்கழி மலர்களிலே அவள் மல்லிகை....

ஒரு பெண்ணைப் பார்த்து நிலவைப் பார்த்தேன் நிலவில் குளிரில்லை அவள் கண்ணைப் பார்த்து மலரைப் பார்த்தேன் மலரில் ஒளியில்லை....

இவ்வாறு கவிநுட்ப வரிகளை சொல்லிக் கொண்டே போகலாம். இப்போது வரும் பாடல்களும் இருக்கிறதே

... முன்னழகை கட்டிக்கோ பின்னழகை வெட்டிக்கோ ஒன்னும் வேணாம் ஒத்துக்கோ எத்தனையோ பெத்துக்கோ

இதெல்லாம் ஒரு பாடல் என்று பாட முடியுமா என்ன?

**திசா — வதிரி**

**இந்திய மீனவர் அத்துமீறலை கண்டித்து ஈழத்து மீனவர் மேற்கொள்ளும் போராட்டம் பற்றி?**

அத்துமீறல் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல. அவை தடுத்து நிறுத்தப்பட வேண்டியது. ஆனால் தடுத்து நிறுத்த வேண்டியவர்கள் அதை தடுத்து நிறுத்தாமல் வேடிக்கைப் பார்ப்பது ஏன் என்பது தான் புரியாமல் உள்ளது. இதில் உள்ள அரசியலை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அடிபடுவது நீங்கள். அது உங்கள் பிரச்சினை. எதையாவது செய்யுங்கள் நாங்கள் வேடிக்கை பார்க்கிறோம் என வேலிகள் இருப்பது முறையல்ல.

இதன் விளைவு எம் உறவுகளுடன் முட்டி மோதுவதாய் அமைந்து விடும். என்ன செய்ய ஊர் இரண்டுபட்டால் கூத்தாட்டிக்கு கொண்டாட்டம் என்பது நன்கு புரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலம்

தேவையில்லாதபோது கிடைக்கும்
பணமும் அன்பும்
கால் தூசிக்குச் சமமானது

சில கனவுகள் நிஜங்களாகவும்
சில நிஜங்கள் கனவுகளாகவுமிருந்தால்
வாழ்க்கை சொர்க்கமாகும்

மௌனங்கள் முற்றுகையிட்ட பின்பு
வார்த்தைகள் உதிர்ந்து
பயனேதுமில்லை-வாழ்க்கை

மனம் மறக்க நினைத்தாலும்
இதயம் மறுக்கிறது...
சிலதையும் சிலரையும்

சிரிக்கும்போது சிரிக்க
வேண்டுமென நினைக்கும் ஜென்மங்களே-பிறர்
அழும்போது கொஞ்சம்
ஆறுதலாய் இருந்தாலென்ன

போலி வேடம் போடத்தெரிந்தவர்கள்
பிழைத்துக் கொள்கிறார்கள்,
face book லும்

நாய்களிடம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்
என சில கணங்கள் கற்றுத்தருகின்றன...

மாவை நா.கஜேந்திரன்.

## நீ அறிவாயா?

ஒரு மௌனத்திற்கு
முன்பும் பின்பும்
ஏதோவொரு வார்த்தை
இருக்கிறது வேலியாய்...

துளையிடப்படாத
மூங்கிலில் நுழைந்த காற்று
இசையின் முகவரி தேடி
திணறுவது போல் தான்
இந்த மௌனமும்...

அழுத்தமான
இந்த மௌனத்திடம்
சூழ்நிலை கைதியாகி அதை
எழுதும் போதெல்லாம்,
உன்னிடம் வருவதற்காய்
எழுந்து வரும் வார்த்தைகள்
தடுக்கி விழுகின்றன..

இப்படித்தான் நமக்கிடையே
ஓர் இறுக்கமான மௌனம்
கலவரம் செய்கிறது..

அந்தக் கலவரத்தில்
போதி மரங்களை
நாடும் மனசை
நீ அறிவாயா?

சங்கரி சிவகணேசன்.

## இராவணன் எங்கள் மூதாதையர்

தமிழின தலையுரி கொண்ட இலங்காபுரியை
உலகில் சிறந்த இனத்தார் தாங்க

அவ் மூத்த குடியின் மூவின வேந்தராய்
வீரம் படைத்த இராவணன் ஆண்டான்

சிரங்கள் படைத்த சிவனின் பக்தன்
வீரம் படைத்த விளக்காய் ஒளிர

அரக்க குலத்தின் அன்னையின் மைந்தன்
தமிழின இனமாய் தரணியில் சிறந்தான்

இன்னல் தடுக்கும் இருபது விழிகள்
உன்னில் கொண்டது எந்தன் இராவணா


உந்தன் சிறப்பால் கயவர் இனங்கள்
உன்னை கூறினார் தங்கள் இனமாய்

இராவணன் எங்கள் பாட்டன் என்று
உரத்துச் சொல்வேன் உலகமெங்கும்

உந்தன் புகழை போற்றும் உலகம்
என்றும் அறியும் உன்னை தமிழர் என்று

ந.விதுஷன்
யா/கற்கோவளம் மெ.மி.த.க
பாடசாலை.

## மௌனத்தின் தேடல்- 548



## சிந்தைக்கு

ஈட்டல் இடல் துய்த்தல் காத்தல்
ஏற்றம் மிகு பெண்மைப் பண்பாம்
காட்டிக் கொள்ளாமல் வாழும் மாடப்
புறாக்கள் ஒன்றில் ஒன்று குறை
காண ஒன்றிறந்தால் மற்றையது
உயிர் தரிக்கா உண்மை உணர்
சிந்தைக்கு எடு உலகம் பெண்மை
போற்றுகின்ற காலம் வெகு
தூரமில்லை புரிந்து
மனம் தேறி வாழப் புத்துணர்வு
பெற்று வாழ்வாய் நீடு
சிவதாசன்
நல்லூர்.

## மௌனத்தின் தேடல்- 549



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எமது முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## புதுமைப்பெண்

உலகில் நாம் வாழும் காலம் கொஞ்சமே
அதற்குள் எத்தனை கஷ்டங்கள்–துன்பங்கள்
எம்மை வாழ்வில் வாட்டுதடா பெண்ணே! அவை
அத்தனையும் சூரியனைக் கண்ட
பனிபோல் விலகி விடும் கண்களைப் பொத்தி
நிற்கும் உன் கைகளை எடுத்துக் கொண்டு
நீ வெற்றி நடை போடு
உலகில் நம் பாரதி கண்ட புதுமைப் பெண்ணாய்
சுப்பிரமணியம் ஜெயரூபன்
பருத்தித்துறை.

## பூ ஒன்று புயலானது

ஆறுதல் கூறவோ பாலைவனம் தேடி ஒரு
நதி வந்தது போல நமக்கும் வெளிநாட்டு
வாழ்க்கை என்றோம் அதுதான் கானல் நீரானது.
நம் வாழ்வின் கஷ்டத்தில் வெளிநாட்டு மோகத்தால்
நம் பெண்கள் மணப்பெண் எனும் போர்வையில்
வயதான ஆண் மகனுக்கு இரையாகின்றார்கள்
(கவலை வேண்டாம்)
இலையே உதிர்ந்த பின் மலர்க்காட்சி காண்பதா
இல்லை உனக்கும் வாழ்விருக்கு
சந்தனம் காய்ந்தபின் வாசம் அற்றுப் போகுமா...?

இரா.ஜெ.துஷ்யந்தா
மாதகல்.

## நாணட்டும்

எதற்காய் முகத்தை மூடி
கண்ணீர் சிந்துகிறாய்?
வசை பாடும் சமூகப்
புல்லுருவிகளுக்கு அஞ்சியா?
என்ன செய்வது?
பொய்யும் புரட்டும்
நிறைந்த உலகமிது
நீதியும் நேர்மையும்
மிதிபடும் காலமிது
ஆனாலும் அஞ்சிடாதே
நிமிர்ந்து நில்.
உண்மையின் வழி நடந்திடு
சேறு பூசும் புரட்டர் நாணட்டும்

சி.இ.அன்புதுரை
சம்மட்டியோலை
மானிப்பாய்.

## நலமிதுவா

முகம் மலரப் புன்னகையால்
பொலிவு பெறும் பிறர் வளமும்
அகம் மகிழ்ந்து சிரிப்பதற்கே
ஆன உயிர் மானுடம் தான்
நகை உவனை காட்டுகின்ற
நளினமான பெண்மைக்கு
நடந்த விதி எதுவாமோ
நானிலமே நலமிதுவா...
சிவதாசன்
காவலூர்.

## மலரும் புன்னகை


புலரும் பொழுதிலே மலரும் மலர்களாய்
என் மனதில் மலர்ந்திடும் மல்லிகையே
உன்னால் இன்று முள்ளும் மலரானது
புயலும் தென்றலானது கண்ணீரும் பன்னீரானது
என் வாழ்வும் வளமானது
[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடற்றவர்களின் கடவுச்சீட்டு

**குயிலனின் மனைவி மண்ட பமே சரிந்து வீழ்ந்ததுபோல வீரிட்டு அழுதாள். குழந்தைகள் பயந்துதங்களது பெற்றோரிடம் எழுந்து ஓடினார்கள். மண்டபத்துக்குள் நின்று கொண்டி ருந்தவர்கள் அனைவரும் உறை ந்து நின்றார்கள். குயிலன் இயன்ற அளவு அவளைத் தேற்றப்பார்த் தான். ஆதிகாரி ஒருவர் குவளை யில் தண்ணீரைக் கொண்டு போய் குயிலனுக்கு அருகில் வைத்தார்.**

## வலி சொல்லும் தொடர்... 19




எத்தனையோ சுற்று சந்திப்புகள், விசாரணைகள், சத்தியக் கடதாசிகள் என்று மனுசன்களைத் துப் போய் விட்டார்.

ஆனால், இவர் மீதான சந்தேகம் தீரவே இல்லை. எப்படியாவது ஒரு நாள், இந்த முகாமின் பிரதான வாயில் கதவுதனக்காகத் திறக்கும் என்று அவர் நம்பிக்கையோடிருக்கிறார்.

இவர் இதனக்கு வெற்றிலை சாப்பிடும் பழக்கமிருப்பதாக முகாமுக்கு வருகிற தமிழ் விருந்தினர்கள் எல்லோரிடமும் தவறாமல் சொலலிவிடுவார். கேட்டுக் கொண்டு போகிறவர்கள் எல்லோரும், ஞாபகம் வைத்துக் கொண்டு வருவதில்லை என்றாலும், அவ்வப்போது அதீத அக்கறையுடைவர்கள், நினைவில் வைத்துக் கொடுப்ப துண்டு.

ஒரு நாள், மெல்போர்னிலுள்ள தமிழ் அகதி நல அமைப்புக்காரர் ஒருவர் பத்துப் பதினைத்து வெற்றிலை, அதற்குள் பாக்கு, சுண்ணாம்பு அனைத்தையும் பொதி செய்து கொண்டு வந்திருந்தார். வாசலில் பணியிலிருந்த வயோதிப உத்தியோகத்தர், சந்தேகத்தின் பேரில் இவரிடம் பையைத் திறக்கச் சொன்னார்.

உடனடியாக குடிவரவு அமைச்சு அலுவலகத்துக்கு அழைத்தார். "அகதிகள் நல அமைப்புக் காரன் ஒருவன் முகாமுக்குள் கள்ளமாக கஞ்சா கொடுப்பதற்கு வந்திருக்கிறான். வாசலில் வைத்தே பிடித்து விட்டேன்" என்றார்.

குடிவரவு அமைச்சு அலுவலகத்திலிருந்து குதிகால் உயர்ந்த காலணிகள் அணிந்த இரண்டு அம்மணிகள், டொக் குடொக்கென்று தார் வீதியில் ஒலியெழுப்பியபடி ஓடி வந்தார்கள். வெற்றிலையை ஆங்கிலத்துக்குள் நுழைக்க முடியாமல் திணறிக கொண் டிருந்த அகதிகள் நல உறுப் பினருக்கு ஹஹலோ' சொன் னார்கள். பிறகு, தாங்களும் பையைத் திறந்து பார்த்தார் கள்.

இந்த நேரத்தில், வெளியில் வந்து பார்த்த போது, கிட்டத் தட்ட பொலீஸை அழைப்பதற்குத் தயாராகிக் கொண்டிருந்த இரண்டு சோடி அதிகா ரிகளிடமும் "கஞ்சா எங்கே?" என்றேன். பையோடு நின்று கொண்டிருந்தவர், அகதிகள் நலனைவிட அப்போதைக்கு தனது நலனை யாராவது காப்பாற்ற மாட்டார்களா என்று வெற்றிலையோடு சேர்ந்து தானும் வியர்த்திருந்தார்.

ஆவரை ஓர் இடத்தில் இருத்தி விட்டு, வெற்றிலைப் பையையும் அதிகாரிகளையும் அழைத்துக் கொண்டு உள்ளே வந்தேன்.

மாபெரும் கஞ்சா கடத்தலை பிடித்து விட்டதில், இளைத்துப் போயிருந்த அதிகாரிகளில் ஒருவர் மூக்குக் கண்ணாடியைச் சரிசெய்து, கணினிக்கு மிக அருகில் வந்து, பசிய இலையில் தெரி ந்த நரம் புகளையும் ஊன்றிப் பார்த்தார்.

அன்றைக்கும் ஐயரின் பைகளைக் கவனமாக சோதனை செய்த அதிகா ரிகள், அவரது தட்டுகள், பூசைக்குரிய தீபம், மணி போன றவறறை மிகக வன மாக தாங்களே உள்ளே கொண்டு வந்து கொடுத்தார்கள்.

மெல்போர்னின் பிரபல மான சுரேஸ் குருக்கள் , குயிலனையும் மனைவி யையும் தனக்கு அருகில் அழைத்து அமரச் சொன் னார். குழந்தையின் சிறிய உருவப்படம், கதிரையொன் றில் வைத்து, அதற்கு முன் னால் இளநீர் வெட்டிப் படைக் கப்பட்டிருந்தது. அருகில், பால் கொடுக்கும் பிளாஸ்டிக் புட்டி நிறைத்து வைக்கப்பட டிருந்தது. அருகில் ஒரு தீபம் எரிந்தது.

குாலை முதல் செய்த சாப்பாடுகள் அனைத்தும், விருந்தினர் மண்டபத்துக்குள் நீண்ட மேசையில் பெரிய தட்டுகளில் வரிசையாக வைக் கப்பட்டன.

விருந்தினர் மண்டத் துக்குள் தமிழ் அகதிகள் தான் பெருமளவில் ஐயருக்கு முன்னால் தரையில் அமர்ந் திருந்தார்கள். மற்ற நாட்டவர்கள், நடைபெறுகிற சடங்கு முறைகளைப் பார்க்கும் ஆர்வத்தில் மண்டபத்தின் உள் ஓரத்தில் நின்று கொண் டிருந்தார்கள். நிறைந்த அமைதி நிலவியது. குயிலனின் குழந்தை இறந்த கவலை அங்கிருந்தவர்கள் அத்தனை பேர் முகங்களில் சுயதுயரமாகப் படர்ந்திருந்தது.

ஓர் அகதி .தைவிட எதைத்தான் பெரிதாக .ழந்துவிடப் போகிறான் என்ற வலி எல்லோருக்குள்ளேயும் குடைந்து கொண்டிருந்தது. தரையில் அமர்ந்திருந்த குழந் தைகளுக்கு எல்லாமே புதினமாயிருந்தன. வழமைக்கு மாறான புதிய - சாப்பாடுகளின் மீது குழந்தைகளின் கண்கள் வசீகரமாக மொய்த்திருந்தன.

ஐயருக்கு ஏதாவது உதவிசெய்ய வேண்டும் என்ற அவதியோடு, தனதுபாராமான உடம்பைத் தூக்கிக் கொண்டு அகுனா அங்கும் இங்கும் பதகளிப்பட்டவாறிருந்தான். மண்ட பத்துக்குள் நின்று கொண்டிருந்த உத்தியோகத்தர்கள் அவனை ஓர் இடத்தில் அமரும்படி அறிவுறுத்தினார்கள்.

தங்களுக்கு அருகே வந்து அமரும்படி நீதனையும் அழைத்தான் குயிலன். குழந்தையின் படத்துக்கு முன்னால் புகைந்த படியிருந்த சந்தனக் குச்சியின் வாசம் எல்லோரிலும் படர்ந்தது.

சூழ்ந்திருக்கும் பெருந் துயரின் நடுவில், தானும் ஒருவனாகி விட்டது போல உணர்ந்தான். அனீஸாவினதும் குழந்தையினதும் ஞாபகம் நெஞ்சில் திரண்டு வழிந்தன. தனக்கும் அனீஸாவுக்கும் இடையிலான இந்த தூரத்தை அவனால் நம்பமுடியவில்லை. இனிமேல், இந்த தூரம்தான் பாதி நிரந்தரம் என்பதையும் அவனால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அளவுக்கதிகமான அந்த மண்டபத்தின் அமைதி, நீதனுக்குள் ஒவ்வொரு மூச்சிலும் சிதைந்த முள்ளாக இதயத்தில் கீறியது.

குயிலனின் மனைவி மண்டபமே சரிந்து வீழ்ந்ததுபோல வீரிட்டு அழுதாள்.

குழந்தைகள் பயந்துதங்களது பெற்றோரிடம் எழுந்து ஓடினார்கள். மண்டபத்துக்குள் நின்று கொண்டிருந்தவர்கள் அனைவரும் உறைந்து நின்றார்கள். குயிலன் இயன்ற அளவு அவளைத் தேற்றப்பார்த்தான். ஆதிகாரி ஒருவர் குவளையில் தண்ணீரைக் கொண்டு போய் குயிலனுக்கு அருகில் வைத்தார். அந்தக் குழந்தையின் இழப்பையும், அதன் பிறகு கண்ட ஊதிப்பெருத்த உடலையும் அந்தத் தாயால் ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை. கரிய இருளில் அந்தக் கடல் கவிழ்த்த படகின் காட்சிகள் மீண்டும் மீண்டும் அவளது முகத்தில் அறைந்தன. குடைசி வரைக்கும் கைகளில் கிடந்த குழந்தையின் முகமும், அதன் அழுகையும் உயிர் நாணை அறுத்தது. கடைசி மூச்சுக்காகத் தன் குழந்தை தேடிய காற்றைத் தான், தான் சுவாசிப்பது போன்ற குற்றத்தின் கூர் விளிம்பு, இதயத்தை விட்டுவிட்டுத் தைத்தது. ஐயரின் முன்னால் நீதன் மயங்கிச் சரிந்தான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கடல் புறா

## சொப்பனமா




அவன் தோரணையையும் கேள்வியில் தொனித்த அதிகாரத்தையும் கண்ட கொள்ளைக் காரர்கள் ஒரு விநாடி மிரண்டனர். பிறகு அவர்களில் ஒரு தமிழன், "நீ யார்?" என்று பதில் கேள்வியொன்றை வீசினான்.

"உங்களில் ஒருவன்" என்றான் இளையபல்லவன் தீர்க்கமான, நிதானமான குரலில்.

"உங்களில் ஒருவனா?" ஆச்சரியத்துடன் அந்தக் கொள்ளைக்காரன் மறுமுறையும் கேட்டான்.

அடுத்த விநாடி அந்த முன்னணிக் கொள்ளைக்காரனுக்குப் பின்னாலிருந்து, "பொய்! பொய்! அவன் உடையைப் பார்" என்று பல குரல்கள் எழுந்தன. இதையடுத்து அர்த்தமில்லாத கூச்சலும் மிரட்டலும் அந்தக் கொள்ளைக்காரர்களிடமிருந்தும் அங்கிருந்த பெண்களிடமிருந்தும் கிளம்பின.

"அவனைக் கொல்லுங்கள், கொல்லுங்கள்!" என பலமான கூச்சல்கள் கடலலைகளையும் அடக்கும் வகையில் எழுந்தன. அத்தனைக்கும் அசையாமல் நின்ற இடத்திலேயே நின்றான் இளையபல்லவன்.

அவனது கூரிய விழிகளில் ஏளன ஒளி மண்டிக் கிடந்தது. அந்தக் கூக்குரலைக் கேட்டு அவன் கை அவன் பெருவாளையோ, கச்சையிலிருந்த சிறு வாளையோ கூட நோக்கிச் செல்லாததைக் கண்ட கொள்ளைக்காரர் குழப்படைந்தனர்.

அடுத்த விநாடி பேசாமலே அவர்களை நோக்கி இரண்டடி முன்னெடுத்து வைத்தான் இளையபல்லவன். சிங்கத்தைக் கண்டு பின் வாங்கும் ஆட்டு மந்தை போல அந்தக் கொள்ளைக்கூட்டம் பின் வாங்கியது. "குலைக்கிற நாய்கள் கடிப்பதில்லை" என்று சீற்றத்துடன் கூவிய இளையபல்லவன் சட்டென்று நின்றான். அந்த கூட்டமும் நின்றது. கூச்சலும் மந்திரத்தில் கட்டுப்பட்டது போல் நின்றது.

சென்ற ஒரு வருடத்தில் அகூதாவிடமிருந்து மனோதத்துவ சாத்திரத்தை நன்றாகப் புரிந்து கொண்டிருந்தான் அந்த வாலிப வீரன். "பெரும் கூட்டங்களை ஆயுத பலத்தால் சமாளிக்க முடியாது.

புத்தி பலத்தாலும் உறுதியாலும் சாமர்த்தியத்தாலுமே சமாளிக்க முடியும்" என்று அகூதா பலமுறை கூறியிருப்பதை அந்தச் சமயத்தில் நினைத்துக்கொண்ட இளையபல்லவன் அந்தக் கொள்ளைக் காரர்களில் முதலில் பேசிய தமிழனை அருகே அழைத்து, "இவர்களுக்குச் சொல் நான் அகூதாவின் உபதலைவன் என்று. அகூதாவை விட்டு விலகி விட்டேன் என்பதையும் தெரிவி!" என்று உத்தரவிட்டான்.

அந்தப் பிராந்தியத்தில் அதிகமாகப் பரவியிருந்த காவி பாஷையில் அதை மொழி பெயர்த்தான் அந்தத் தமிழன். பதிலும் காவி பாஷையிலேயே வந்தது. "இங்கு ஏன் வந்தான்?" என்று மீண்டும் பல குரல்கள் கிளம்பின. அதையும் மொழிபெயர்த்தான் தமிழன்.

"உங்களுடன் வசிக்க. உங்கள் உதவியைப் பெற. உங்களுக்கு அளவற்ற செல்வத்தையும் அளிக்க. உங்களுக்குத் தெரியுமா பெரும் பொருளை ஏற்றிக்கொண்டு கலிங்கத்துக் கப்பலொன்று செல்லப்போகிறதென்று!" என்று வினவினான் படைத்தலைவன்.

இது மொழிபெயர்க்கப்பட்டதும் அந்தக் கூட்டத்தின் பயங்கரக் கூச்சலுக்குப் பதில் களிவெறிக் கூச்சல் எழுந்தது. பொன்னை எதிர்பார்த்ததால் ஏற்பட்ட வெறி அவர்கள் எதிர்ப்பை நிமிட நேரத்தில் நட்பாக மாற்றவே அவர்களில் சிலர் அவனைக் கட்டிக் கொண்டார்கள்; அவன் இஷ்டப்பட்டிருந்தால், அவனைத் தூக்கிக்கொண்டும் கோட்டைக்குச் சென்றிருப்பார்கள்.

இளையபல்லவன் அதை அனுமதிக்காமல் அவர்களை விலக்கிக் கொண்டு, முன்னே நடந்தான். அவர்கள் கூச்சலிட்டுக் கொண்டும், ஆடிப்பாடிக் கொண்டும் அவனைப் பின் தொடர்ந்து சென்றார்கள்.

வானைப் பிளந்த அவர்கள் களிவெறிக் கூச்சல் திடீரென நின்றது. கோட்டை மீதிருந்து வீசப்பட்ட விஷ அம்பு அவன் மார்பில் பாய்ந்ததும் கூச்சல் ஸ்தம்பித்தது. பயத்தின் மூச்சுக்காற்று மட்டும் 'ஹா' என்ற சப்தத்துடன் எழுந்தது.

அடுத்த விநாடி அதுவே ஆச்சரியத்துக்கு அடிகோலியது. விஷ அம்பு மார்பில் தைத்திருக்க, கண்ணிமைக்கும் நேரம் நின்ற கருணாகர பல்லவன் தள்ளாடித் திடீரென விழுவானென்று அவனைப் பிடிக்கப் போன இரு கள்வரும் அவன் உதடுகளிலிருந்து உதிர்த்த திடீர்ச் சிரிப்பைக் கேட்டுத் திகைத்தனர்.

அடுத்த விநாடி அந்த அம்பை மார்பிலிருந்து பிடுங்கி அலட்சியமாக அவன் எறிந்துவிட்டு மேலே நடக்க முற்பட்டதையும் அம்பு தைத்த இடத்தில் சிறிது இரத்தம்கூட வராததையும் கண்டு பெரும் பயமும் வியப்பும் அடைந்தனர் கள்வர்.

அதன் விளைவாகச் சிலர் அவனைத் தொடர்ந்தனர். சிலர் கைகளை ஆகாசத்தில் ஆட்டி மேற்கொண்டு அம்பு வீச வேண்டாமென்று கோட்டைக் காவலருக்கு எச்சரித்தார்கள்.

அத்துடன் ஏதோ மந்திரத்தால் வசப்பட்டவர்கள் போல் தேவபுருஷனைத் தொடரும் மானிடப் பிறவிகளென இளையபல்லவனைத் தொடர்ந்து சென்றார்கள்.

அவர்கள் செய்த சைகைகளாலும் அவர்கள் கூட்டமாக இளையபல்லவனைத் தொடர்ந்து வந்ததாலும் அபாயமேதுமில்லை என்பதைப் புரிந்துகொண்ட கோட்டைக் காவலர் மேற்கொண்டு அம்புகளை வீசாமல் கோட்டைக் கதவுகளையும் திறந்தார்கள்.

அங்கிருந்த கோட்டைக் காவலரின் தலைவனை நோக்கிய கருணாகர பல்லவன் கோட்டைத் தலைவனை அவசரமாகப் பார்க்க வேண்டுமென்று கேட்டான்.

காவலர் தலைவன் சில விநாடிகள் இளையபல்லவனை ஏற இறங்கப் பார்த்தான்.

அவன் உடையின் உயர்வையும் தோரணையின் கம்பீரத்தையும் கண்டு, 'சரி பின்னால் வா' என்பதற்கறிகுறியாகச் சைகை செய்துவிட்டு முன்னால் நடந்தான்.

கொள்ளையர் புடை சூழக் காவலர் தலைவனைப் பின்பற்றி அந்த மலைச் சரிவின் சில வீதிகளைத் தாண்டி உச்சியிலிருந்த மாளிகைக்கு வந்த இளையபல்லவன் கடைசியாக அந்த மாளிகையின் பெரும் அறையொன்றில் உட்கார வைக்கப்பட்டான்.

விநாடிகள் சில ஓடின. தீவிர சிந்தனையில் ஆழ்ந்து அந்த அறையைச் சுற்றுமுற்றும் பார்த்த இளையபல்லவன் பயங்கரமான ஒரு மனிதனின் இருப்பிடத்திற்குத் தான் வந்திருப்பதை உணர்ந்து கொண்டான்.

அத்தகைய மனிதனைத் தான் சரிபடுத்த வேண்டுமானால் தன் சாமர்த்தியத்தில் பெரும்பகுதியை உபயோகிக்க வேண்டியிருக்குமென்பதையும் புரிந்து கொண்டான்.

இப்படி அவன் சிந்தனைகள் ஓடிக்கொண்டிருந்த சமயத்தில் தூரத்தே இருந்த சிறு கதவு ஒன்று திறக்கப்பட்டு, கோட்டைத் தலைவன் உள்ளே நுழைந்தான்.

அவனைக் கண்டதும் இளையபல்லவனின் சிந்தனைகள் எங்கெங்கோ பறந்தன. விபரிக்க இயலாத பெரும் திகைப்பு அவன் இதயத்தைச் சூழ்ந்து கொண்டது.

தான் இருப்பது உண்மையில் அக்ஷயமுனைதானா? என்பது பற்றிப் பெரும் சந்தேகம் துளிர்த்தது அவன் இதயத்தில். தான் காண்பது சொப்பனமா என்று கூடச் சிந்தித்தான் அவன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரமே வாகை சூடும் திரைவிமர்சனம்



நாயகன் விஷால் போலீஸ் எஸ்ஐ பதவிக்கு தேர்வு எழுதி விட்டு ரிசல்ட்டுக்காக காத்துக் கொண்டிருக்கிறார். இவருடைய அப்பா மாரிமுத்து பொலிஸ் ஏட்டாக இருக்கிறார். விஷாலின் தங்கை ரவீனா ரவி கல்லூரியில் படித்து வருகிறார்.

ரவீனாவை லோக்கல் ஏரியாவில் இருக்கும் ரவுடியின் தம்பி காதலிக்கிறார். ஆனால், ரவீனா அவருடைய காதலை ஏற்க மறுக்கிறார். இதனால் கோபமடையும் ரவுடியின் தம்பி ரவீனாவை மிரட்டி காதலை சொல்ல வைக்கிறார். இது விஷாலுக்கும், தெரிய வர ரவுடியின் தம்பியை அசிங்க படுத்துகிறார்கள்.

இதனால், ரவீனாவை கடத்த முயற்சி செய்கிறார். வில்லன் ஆனால், எதிர்பாராத விதமாக வேறொரு கும்பல் ரவீனாவை கடத்தி விடுகிறார்கள். இறுதியில் தங்கை ரவீனாவை விஷால் கண்டு பிடித்தாரா? ரவீனாவை கடத்திய கும்பல் யார்? எதற்காக கடத்தினார்கள்? என்பதே படத்தின் மீதிக்கதை.

படத்தில் நாயகனாக நடித்து இருக்கும் விஷால் தனக்கே உரிய பாணியில் நடித்து அசத்தி இருக்கிறார். தங்கை பாசம், சமுதாயத்தின் மீது அக்கறை, சாமானிய மனிதனின் கோபம் என நடிப்பில் பளிச்சிடுகிறார். குறிப்பாக ஆக்ஷன் காட்சிகளில் வெளுத்து வாங்கி இருக்கிறார்.

நாயகியாக நடித்திருக்கும் டிம்பிள் ஹயாதி கொடுத்த வேலையை சிறப்பாக செய்து இருக்கிறார். தங்கையாக வரும் ரவீனா நடிப்பில் கவனிக்க வைத்திருக்கிறார். வில்லன் பாபு ராஜ் கதாபாத்திரத்திற்கு கச்சிதமாக பொருந்தி இருக்கிறார். அனுபவ நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார் மாரி முத்து. காமெடியில் ஆங்காங்கே சிரிக்க வைத்திருக்கிறார் யோகி பாபு.

சாமானிய மனிதனின் கோபத்தை மையமாக வைத்து படத்தை இயக்கியிருக்கிறார் இயக்குனர் து.ப.சரவணன். வெவ்வேறு திசையில் செல்லும் மூன்று கிளை கதைகளை ஒன்றாக அமைத்து திரைக்கதை உருவாக்கி இருக்கிறார்.

வழக்கமான கமர்ஷியல் படத்திற்கு உண்டான அம்சங்களை வைத்தே படத்தை இயக்கி இருக்கிறார். ஆக்ஷன் காட்சிகள் படத்திற்கு பலம். பிற்பாதியில் யூகிக்கும் படியான காட்சிகள் மற்றும் வசனங்கள் படத்திற்கு பலவீனம்.

கவினின் ஒளிப்பதிவு திரைக்கதை ஓட்டத்திற்கு பெரிதும் உதவி இருக்கிறது. யுவன் சங்கர் ராஜாவின் இசையில் பாடல்கள் அனைத்தும் கேட்கும் ரகம். பின்னணி இசையிலும் ஸ்கோர் செய்திருக்கிறார்.

## சமீபத்தில் வெளியான படத்தை பாராட்டிய நடிகர் கமல்

அசோக் செல்வன், அபிஹாசன் நடிப்பில் வெளியான 'சில நேரங்களில் சில மனிதர்கள்' படத்தை நடிகர் கமல்ஹாசன் பாராட்டியுள்ளார்.

சூது கவ்வும், தெகிடி போன்ற படங்களில் நடித்து பிரபலமான அசோக் செல்வன், மணிகண்டன், அபிஹாசன் நடிப்பில் விஷால் வெங்கட் இயக்கித்தில் வெளியாகியுள்ள திரைப்படம் 'சில நேரங்களில் சில மனிதர்கள்'.

இப்படத்தில் ரித்விகா, அஞ்சு குரியன், நாசர், கே.எஸ். ரவி குமார் உள்ளிட்ட பலர் நடித்திருக்கிறார்கள். ராதன் இசையமைத்துள்ள இப்படத்துக்கு மெய்யேந்திரன் ஒளிப்பதிவு செய்துள்ளார்.

இப்படத்தை ட்ரை டெண்ட் ஆர்ட்ஸ் மற்றும் ஏஆர் எண்டர்டெய்ன்மெண்ட் நிறு வனங்கள் இணைந்து தயாரித் திருந்தது.

சில நேரங்களில் சில மனிதர்கள் இப்படம் சமீபத்தில் திரையரங்குகளில் வெளியாகி அனைவரின் மத்தியிலும் நல்ல வரவேற்பு பெற்றது.

இப்படத்தை சினிமா பிரபலங்கள் பலரும் பாராட்டி வந்தனர். இந்நிலையில் 'சில நேரங்களில் சில மனிதர்கள்' படத்தைப் பார்த்த கமல்ஹாசன் படக்குழுவினரை நேரில் அழைத்து பாராட்டு தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பில் படக்குழுவினர் அனைவரும் கலந்து கொண்டு கமலுடன் புகைப்படம் எடுத்து கொண்டனர். இந்த புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது.

## ஆஸ்கர் வின்னர்களுடன் இணையும் இயக்குநர் பார்த்திபன்



1989-இல் வெளியான புதிய பாதை படத்தின் மூலம் தமிழ் திரையுலகிற்கு இயக்குனராக அறிமுகமானவர் பார்த்திபன். இவர் உள்ளே வெளியே, ஹவுஸ் புல், கதை திரைக்கதை வசனம் போன்ற பல படங்களை இவர் இயக்கியிருந்தார். இவர் இயக்கிய 'ஒத்த செருப்பு அளவு 7' என்ற படத்தின் மூலம் இந்திய சினிமாவின் கவனத்தை ஈர்த்தார்.

சென்ற ஆண்டுக்கான தேசிய விருதையும் இப்படம் தட்டிச் சென்றது. இப்படத்தின் வெற்றியைத் தொடர்ந்து பார்த்திபன் "இரவின் நிழல்" என்ற படத்தை இயக்கி நடித்து வருகிறார். இப்படத்திற்கு ஏ.ஆர். ரகுமான் இசையமைக்கிறார்.

தற்போது இப்படத்தை குறித்து சுவாரசியமான தகவல் ஒன்றை படக்குழு வெளியிட்டுள்ளது. அதன் படி ஓஸ்கர் நாயகர்கள் சிலர் இப்படத்தில் இணைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 2014-ஆம் ஆண்டு கன்னட மொழியில் வெளியான "வ்ஹிப் லஸ்" என்ற படத்திற்காக சிறந்த சவுண்ட் டிசைனுக்கான ஆஸ்கர் விருதை பெற்ற கிரைக் மானும், 2016-ஆம் ஆண்டு அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திற்கான ஓஸ்கர் விருதை கட்டா லங்கோ லியோனும் பெற்றிருந்தனர். இந்த இருவரும் தற்போது பார்த்திபன் இயக்கும் இரவின் நிழல் படத்தில் இணைந்துள்ளனர். இதற்குமுன் இசையமைப்பாளர் ஏ.ஆர். ரகுமான் இப்படத்தில் இணைந்திருந்ததால், மூன்று ஓஸ்கர் நாயகன் இப்படத்தில் இணைந்துள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : உத்தமன்
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : கே.வி.மகாதேவன்
பாடியவர் : ரி.எம்.சௌந்தரராஜன்



கேளாய் மகனே கேளொரு வார்த்தை
நாளைய உலகின் நாயகன் நீயே
கேளாய் மகனே கேளொரு வார்த்தை
நாளைய உலகின் நாயகன் நீயே

பாவத்தைக் கண்டால் விலகிவிடு
பாதையைப் பார்த்து நடந்து விடு
பாவத்தைக் கண்டால் விலகிவிடு
பாதையைப் பார்த்து நடந்து விடு
ஆபத்தை சந்திக்க துணிந்துவிடு
அழுவதை மட்டும் மறந்து விடு

ஆரத்தி விளக்கும்
நாதத்தின் ஒலியும்
ஆலயமணியும் நீயே..நீயே..

கேளாய் மகனே கேளொரு வார்த்தை
நாளைய உலகின் நாயகன் நீயே

கொள்ளும் கொள்கையில் குரங்காக
கொடுமையைக் கண்டால் புலியாக
கொள்ளும் கொள்கையில் குரங்காக
கொடுமையைக் கண்டால் புலியாக
குறி வைத்து பார்ப்பதில் கொக்காக

குணத்தில் யானையின் வடிவாக

ஆடிடும் மானும்
ஆனந்த மயிலும்
பேசிடும் கிளியும் நீயே நீயே

கேளாய் மகனே கேளொரு வார்த்தை
நாளைய உலகின் நாயகன் நீயே

தந்தை கொடுத்தது தாயிடமே
தாயார் கொடுத்தது என்னிடமே
தந்தை கொடுத்தது தாயிடமே
தாயார் கொடுத்தது என்னிடமே
அன்னை இருப்பது தனியிடமே
ஆயினும் அவள் மனம் உன்னிடமே

கோடை நிழலும்
வாடை கனலும்
கோபுர விளக்கும் நீயே நீயே..

கேளாய் மகனே கேளொரு வார்த்தை
நாளைய உலகின் நாயகன் நீயே
கேளாய் மகனே கேளொரு வார்த்தை
நாளைய உலகின் நாயகன் நீயே

# இந்திய இழுவைப் படகுகளால் அழிவடையும் மீன் வளம்

இலங்கையின் உள்நாட்டு பொருளாதாரத்தில் முக்கிய வகிபாகமாக இருப்பதுடன் குறிப்பிட்ட அளவு அந்நியசெலாவணியை பெற்று தரும் தொழிலாக இருப்பது மீன்பிடியாகும். இலங்கையின் வடக்கே பருத்தித்துறை தொடக்கம் தெற்கே காலி, மாத்தறை வரையான கடற்கரை பகுதிகளில் மீன்பிடி நடவடிக்கைகளை மையப்படுத்திய பொருளாதார நிலைமையே காணப்படுகிறது.

இலங்கையின் கரையோரப் பகுதிகளை பொறுத்த வரையில் மீன்பிடி, கருவாடு உற்பத்தி மற்றும் சுற்றுலா துறையை முக்கியப்படுத்தினாலும் கரையோரப் பகுதிகளில் மீன்பிடியை நம்பி வாழ்வாதாரத்தை கொண்டு நடத்தும் குடும்பங்களே அதிகம்.

வடக்கில் பெரும்பாலான மீனவர்கள் கண்ணாடியிழை படகுகள் மற்றும் வள்ளங்களை பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். என்னும் சில பகுதிகளில் தூண்டல்கள், சுழியோடல் மற்றும் கட்டுவலை, கரவலை மூலம் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன் வழிச்சல் வலை, சுருக்கு வலை, லைலா வலை போன்ற முறைகளையும் பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

களால் பொருத்தப்பட்டிருக்கும் மடி வலைகளால் மீன்கள் அள்ளப்படும் சமயத்தில் கடலின் அடிப்பகுதியில் மீன்கள் இனப்பெருக்கம் செய்யும் முறைகை கற்பாறைகள், மீன்கள் மறைந்து வாழும் வாழிடங்கள், இயற்கை தாவரங்கள், சேறுகள் மற்றும் பல வகையான பாசிகள் என எல்லாம் அள்ளி செல்லப்படுகின்றது. இலங்கை மீனவர்களின் மூலம் நாள் ஒன்றுக்கு பிடிக்கப்படும் மீனின் அளவை விட இந்திய இழுவை படகு ஐந்து மடங்கு அதிகளவான மீன்களை அள்ளி செல்வதுடன் கடல் வளங்களையும் அழித்து செல்கிறது.

பொதுவாக மீனின் இனப்பெருக்கமும் வளர்ச்சியும் கடலடித்தள மேடை பகுதி என சொல்லப்படும் CONTINENTAL SHELF ஆழ்கடல்/களப்பு ஆகிய கடலுக்கு இடைப்பட்ட பகுதியிலேயே நடைபெறுகிறது. இவ்வாறான கடலடித்தள மேடைப்பகுதி பெரும்பாலும் யாழ்பாணத்தின் காங்கேசன்துறை மற்றும் மன்னாருக்கும் முல்லைத்தீவுக்கும் இடைப்பட்ட பகுதிகளிலேயே அதிகளவாகக் காணப்படுகிறது. இதன் நீளம் அண்ணளவாக 480 கிலோ மீற்றராகவும் அகலம் 60 கிலோ மீற்றர் வரை உள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டே இந்திய மீனவர்களின் வருகை அதிகளவில் மன்னார் மாவட்டத்தை

யிலேயே அப்பகுதிகளில் தற்போது மீன் வளம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அந்த பகுதிகளின் மீன்களின் இனப்பெருக்கமும் சடுதியாக குறைந்துள்ளது.

அதனை மையப்படுத்தியே தற்போது பெரும்பாலான தமிழக மீனவர்கள் இலங்கை கடல் பரப்பை நோக்கி தங்கள் பார்வையை திருப்பியுள்ளனர் இலங்கை கடற்படையின் தீவிர கண்காணிப்பு மற்றும் தாக்குதல், தொடர் ரோந்து நடவடிக்கை இவை எல்லாவற்றையும் தாண்டி துப்பாக்கி சூட்டு சம்பவங்கள் இடம் பெற்றாலும் இந்திய மீனவர்களின் வருகை நின்றபாடில்லை.

இவ்வாறன இந்திய மீனவர்களின் வருகையின் பின்னணியில் வெறுமனே வருமானம் மட்டுமே நோக்காகக் கொள்ளப்பட்டால் இலங்கை கடற்படையின் ரோந்து நடவடிக்கையே அவர்களை திருப்பி அனுப்பி விடும். ஆனாலும் இதன் பின்னால் உள்ள பல பண முதலைகளின் இலாபத்திற்காக வருமானம் இன்றி, போதிய கல்வி இன்றி வறுமை கோட்டுக்கு கீழ் வாழும் பல அப்பாவி தமிழக மீனவர்கள் இலக்கு வைக்கப்படுகின்றனர் என்பதே உண்மை. இலங்கை கடல் எல்லையில் அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபட்டதாக கைது செய்யப்படும் பெரும்



வடமாகாணத்தை சூழ உள்ள கடற்பரப்பின் தன்மை, கடற்பரப்பின் தட்பவெப்ப நிலை மற்றும் முருகை கற்பாறைகளின் பரவல், கடலடிதள மேடைகள் அதிகமாக காணப்படுவதனால் மீன்கள் அதிகமாக காணப்படுவதுடன் மீன் உற்பத்தித் திறனும் அதிகமாகக் காணப்படுகிறது.

இவ்வாறான நிலையில் யுத்தம் நிறைவடைந்த பிற்பாடு வடக்கு கடல் எல்லை பகுதிகளில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கை மற்றும் இழுவை படகின் மூலமான கடற்றொழில் நடவடிக்கை காரணமாக வடக்கு மாகாண கடல் வளம் மற்றும் மீன் வளம் முற்றாக நாசமடைவதற்கான சூழல் ஏற்பட்டுள்ளது.

கடற்பரப்புக்களில் உள்ள இயற்கை பல்வகைமையை அழிக்கும் விதமாக பாரிய மடிகளை பயன்படுத்தி தடை செய்யப்பட்ட "அடிமட்ட வலைபாய்ச்சலின்" ஊடாக கடலின் அடிப்பகுதியில் உள்ள அனைத்து வளங்களையும் அள்ளி செல்வதுடன் அளவு வித்தியாசம் இன்றி அனைத்து அளவிலான மீன்களையும் அள்ளிச் செல்கிறது இந்திய மீனவர்களின் இழுவை படகுகள்.

இவ்வாறான பாரிய இயந்திரங்களை பயன்படுத்தி கடல் [illegible]

அடிப்படையாக கொண்ட கடல் பகுதிகளிலும் அதேநேரம் யாழ்பாணத்தின் காங்கேசன்துறை பகுதியிலும் குறிப்பிட்ட அளவும் காணப்படுகிறது.

ஸ்பெயின்,நோர்வே உட்பட பல நாடுகள் இவ்வாறான இழுவை படகு மூலமான மீன்பிடி நடவடிக்கைகளில் ஈட்பட்டதன் காரணமாக தற்போது அந்த நாட்டில் உள்ள மீன் வளங்கள் பாரிய அளவில் அழிந்துள்ளன. தற்போது அந்த நாடுகள் தங்கள் நாட்டில் மீன்பிடி நடவடிக்கை மேற்கொள்ள முடியாமையினால் கடல் எல்லைகளைத் தாண்டி சில ஆபிரிக்க நாடுகளின் கடல்பகுதியில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட வேண்டிய அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இதே போன்ற ஒரு பின்னணியிலேயே இந்திய இழுவை படகுகளின் வருகையும் எமது நாட்டுக்குள் நோக்கப்பட வேண்டும். இந்திய கரையோரப்பகுதிகளில் குறிப்பாக தமிழ் நாட்டை சூழவுள்ள தனுஸ்கோடி பாம்பன் இராமேஸ்வரம், தங்கச்சி மடம் போன்ற பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் 30 வருடங்களுக்கு மேலாக அப்பகுதிகளை சூழவுள்ள கடல் பகுதிகளில் இவ்வாறான இழுவை படகுகளை பயன்படுத்தி "அடிமட்ட மடி வலைகள்" ஊடாக மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த நிலை

பாலான மீனவர்கள் நாட்கூலிக்காக இழுவை படகுகளில் ஏற்றப்படும் அப்பாவிகளே. இவர்களுக்கு பின்னால் உள்ள முதலாளிகளின் முகங்கள் பெரும்பாலும் மறைவாகவே உள்ளது.

இந்த நிலையில் இலங்கை மீனவர்கள் தங்கள் தொழிலை தக்க வைப்பதுடன் மீன் வளங்களைப் பாதுகாக்க வேண்டிய நிலை காணப்படுகிறது. வெறுமனே போராட்டங்கள் ஊடாக இந்திய மீனவர்களின் வருகையை கட்டுப்படுத்த முனைவது சாத்தியமற்றதே. மாறாக இரு நாட்டு மீனவர்களும் சர்வதேச கடல் எல்லை சார்ந்த பகுதிகளின் மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்ள வேண்டும் என்பதுடன் இலங்கை மீனவர்களும் ஆழ்கடல் மீன்பிடி போன்ற மீன்பிடி நடவடிக்கைகளுக்கு தம்மை தயார்படுத்துவது சிறந்ததாகும். இதை விடுத்து இதை இரு நாடுகளின் இராஜதந்திர பிரச்சினை என அரசியல்மயப்படுத்தாது இரு தரப்புக்களும் நடைமுறைப்படுத்தக்கூடிய காத்திரமான முடிவுகளை பேச்சு வார்த்தைகள் மூலமும் கலந்துரையாடல் மூலமும் எடுக்கும் போதே எமது வளம் பாதுகாப்படும்.

ஜோசப் நயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈபிள் கோபுரம் (பிரான்ஸ்)

பூமியின் தட்பவெப்பத்துக்கு ஏற்ப 5 செ.மீ.வரை அதன் உயரத்தில் அவ்வப்போது மாறுபடும். காற்று பலமாக வீசும் தருணத்தில் அதன் உச்சிப் பகுதியில் 18 செ.மீ. அளவு சாய்வுத் தன்மை மாறுகிறது.

ஈபிள் கோபுரம் முதலில் நிறுவப்படும் போது அதன் வடிவமைப்பு அப்படி ஒன்றும் அழகானது அல்ல என்ற எண்ணம் பாரிசில் பெரும்பாலானோருக்கு இருந்தது.

பிரான்சின் முக்கிய பிரமுகர்கள் சிலர் ஈபிள் கோபுரம் பாரிசின் அழகைக் கெடுத்து விடும் என்றும், அதனை நிறுவ அனுமதிக்க வேண்டாம் என்றும் மேயரிடம் மனு அளித்திருந்தனர்.

குஸ்டாவ் ஈபிள், கற்களை விட இரும்புத்துண்டுகள் வலிமையானவை என்று நிரூபிப்பதன் மூலம் தனது நிறுவனத்தின் வணிக வளர்ச்சியை முன்னிட்டே இந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார் என்று ஒரு சிலர் குற்றம் சுமத்தினர்.

பலத்த விவாதங்களுக்குப் பிறகு, கோபுரம் கட்ட அனுமதி அளித்த பாரிஸ் நகர நிர்வாகம், 20 ஆண்டுகள் மட்டும் அங்கே வைத்திருக்கலாம். அதற்குப் பிறகு அதைப் பிரித்து எடுத்துச் சென்று விடவேண்டும் என்று குஸ்டோவ் ஈபிளிடம் நிபந்தனை விதித்தது.

ஆனால் அதற்கு கிடைத்த வரவேற்பு, ஆண்டுதோறும் அதிகரித்த பார்வையாளர்கள் வருகை ஆகியன ஈபிள் கோபுரத்தை பிரான்சின் அசைக்க முடியாத அடையாளமாத ஆகிவிட்டன. ஈபிள் கோபுரத்தை ஏழு ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பித்து வருகிறார்கள்.

காற்றின் ஈரப்பதத்தினால் இரும்புத் துண்டுகள் சிதைவுறாமல் இருக்க சிறப்புத் தன்மை கொண்ட வண்ணங்கள் மட்டும் சுமார் 50 தொன் அளவுக்கு செலவாகின்றன.

மனிதனால் கட்டப்பட்ட உலகின் மிக உயரமான அமைப்பு என்ற பெருமையை 41 வருடங்கள் ஈபிள் கோபுரம் தக்க வைத்திருந்தது. பிறகு 1930 ஆம் ஆண்டு நியூயோர்க் நகரில் கட்டப்பட்ட க்ரைஸ்லர் கட்டடம் அந்தப் பெருமையை தனதாக்கிக்கொண்டது. (1931 இல் எம்பயர் ஸ்டேட் கட்டடத்திற்கு அந்த பெருமை சென்றது).

முதல் உலகப்போர் சமயத்தில் பிரான்ஸ் இராணுவத் துருப்புகளுக்கு தகவல் பரிமாற்றம் செய்ய தகவல் தொடர்புச் சாதனங்களும், சில முக்கிய ஆயுதங்களும் ஈபிள் கோபுரத்தில் வைக்கப்பட்டன. அதற்குப் பிறகு வானொலி மற்றும் தொலைக்காட்சி நிலையங்களின் அன்டனாக்கள் வைக்கப்பட்டன. இன்றைக்கு சுமார் 120 அன்டனாக்கள் அதன் உச்சிப்பகுதியில் பொருத்தப்பட்டுள்ளன.

(தொடரும்)

## ஈபிள் கோபுரத்தை மணந்த பெண்



கோபுரத்தை எரிக்கா முத்தமிடும் காட்சி

அமெரிக்காவைச் சேர்ந்த பெண்மணி எரிக்கா. இவரது பூர்வீகம் இத்தாலி. 2007 ஆம் ஆண்டு 'தான் ஈபிள் கோபுரத்தை மணம் புரிந்ததாகவும், தனது பெயரை எரிக்கா ஈபிள் என்று மாற்றிக் கொண்டதாகவும்' அறிவித்து பரபரப்பை ஏற்படுத்தினார்.

அமெரிக்காவின் வில்வித்தை வீராங்கனையான எரிக்கா ஏற்கனவே பெர்லின் சுவரை மிகவும் காதலிப்பதாக அறிவித்தவர்.

உயிரற்ற பொருட்கள், கட்டடங்கள் ஆகியவற்றின் மீது அக்கறையான அன்பை செலுத்த வேண்டும் என்பதற்காக ஒரு அமைப்பை நிறுவியிருக்கிறார் எரிக்கா.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2500

**சுகுணா**

Bankல நிக்கும் போது பொக்கெட்றில பணம் இருக்கிறதைக்கூட வெளியில காட்டலாம்



ஆனால் பேனா இருக்கிறதை மட்டும் வெளியில காட்டவே கூடாது.

**கஜன்**

எல்லாருமே கண்டிப்பா கல்யாணம் பண்ணிக்கனும்



ஏன்னா சந்தோசம் மட்டுமே வாழ்க்கை இல்லை...

**குலம்**

கடவுள் கொடுத்த வரம்கிடைக்கவில்லை எனக்குகடவுளே கிடைத்தார் வரமாக



அப்பா

**விபுஷனா**


என் வீட்டுக்கு விளக்கேத்த வருவியான்னு கேட்டேன் விளக்குமாத்த எடுத்துட்டு வர்றா



ஒருவேளை வீட்ட பெருக்கிட்டு விளக்கேத்துவாளோ...?

**கம்சி**

அப்பாவை இழந்த மகன்களுக்கு மட்டுமே தெரியும்



குடும்பத்தை நடத்தும் வலி வாழ்நாள் முழுதும் என்று

**புவனா**

பக்கத்துல இருந்து பிள்ளைங்கள கவனிக்கிற அம்மாவைவிட



நம்ம பிள்ளைங்க பக்கத்துல இல்லையே என பிள்ளைகளுக்காக வெளியூரில் உழைக்கச் சென்ற அப்பாக்களின் ஏக்கம் ஆயிரம் அம்மாக்களின் பாசத்திற்கு சமமானது!

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நித்திலம் தொகுத்து வழங்கும்
சுகமான விடியல் 277
வலம்புரியின் மருத்துவச்சுடர்

# யாழ்ப்பாணத்தை உலுக்கும் உண்ணிக் காய்ச்சல் (Scrub Typhus)

மாரி காலத்தைத் தொடர்ந்து பல தொற்று நோய்கள் யாழ்ப்பாணத்தில் பரவி வருகின்றன. டெங்குக் காய்ச்சல், எலிக்காய்ச்சல், உண்ணிக்காய்ச்சல் என்பன அவற்றில் முக்கியமானவை. இன்று நாங்கள் Scrub Typhus எனப்படும் உண்ணிக்காய்ச்சலைப் பற்றிப் பார்ப்போம்.


கடந்த ஆண்டு யாழ்.போதனா மருத்துவமனையில் மட்டும் சுமார் 274 பேர் உண்ணிக் காய்ச்சலுடன் அனுமதிக்கப்பட்டார்கள். இந்த ஆண்டு ஆரம்பத்திலிருந்து இன்று வரை சுமார் 30 பேர் இந்நோயுடன் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

மாரிகாலத்திலேயே இந்த நோய் அதிகமாகப் பரவுகின்றது. இது யாழ்ப்பாணத்தில் பரவலாகக் காணப்பட்ட போதிலும் கோப்பாய், அச்சுவேலி, புத்தூர், இடைக்காடு போன்ற இடங்களில் அதிகம் காணப்படுகிறது.

இந்த உண்ணிக்காய்ச்சல் trombiculid mite என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் சருகு உண்ணியின் குடம்பி (Larva) மனிதர்களை தற்செயலாகக் கடிப்பதனதால் பரப்பப்படுகின்றது. இது Orientia tsutsugamushi எனப்படும் ஒரு வகை சிறய பக்றீரியாவினால் ஏற்படும் நோயாகும்.

சருகு உண்ணியின் நிறையுடலி தாவரப் பாகங்களை உண்கின்றன. உண்ணியின் குடம்பிகள் மழை காலத்தில் புற்களின் நுனியிலும் பற்றைகளின் இலை விளிம்புகளிலும் காணப்படுகின்றன.

இவை பொதுவாக எலிகள், ஆடு, மாடுகள், நாய்கள் போன்ற விலங்குகளையே கடித்து உறிஞ்சுகின்றன. மனிதர்களை அவை தற்செயலாகவே கடிக்கின்றன. இந்த உண்ணிகள் மிகவும் சிறியவை. நிறையுடலி 1-2 mm நீளமானது. குடம்பி 0.3 mm நீளமானது.




புற்களிலும் பற்றைகளிலும் காணப்படும் உண்ணிக் குடம்பிகள் மனிதர்கள் வெற்றுக்கைகள், கால்களுடன் வேலை செய்யும் போது அவை உடலில் ஏறி ஊர்ந்து செல்கின்றன.

அவ்வாறு ஊர்ந்து சென்று கமக்கட்டு, அரை, இனப் பெருக்க உறுப்புக்கள், பெண்களின் மார்பகங்களுக்கு அடிப்பகுதி போன்ற ஈரளிப்பான தோல் மடிப்புக்கள் உள்ள இடங்களில் கடிக்கின்றன. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நோ, அரிப்பு என்பன ஏற்படுவதில்லை. சிலவேளைகளில் அரிப்பு ஏற்படலாம். எனவே உண்ணிக் குடம்பி கடித்ததை நாம் அறியமாட்டோம்.

கிருமித்தொற்றுள்ள உண்ணிக்குடம்பிகள் கடிக்கும் போது தான் எமக்கு உண்ணிக்காய்ச்சல் ஏற்படுகிறது. உண்ணிக் காய்ச்சலின் அறிகுறிகளாவன, கடுமையான காய்ச்சல், கடுமையான தலைவலி, உடல் தசைகளில் நோ என்பனவாகும். இந்த அறிகுறிகள் டெங்குக் காய்ச்சல், எலிக்காய்ச்சல், வைரஸ் காய்ச்சல் போன்றவற்றிலிலும் ஏற்படுவதனால் வேறுபடுத்தி அறிவது கடினமாகும்.



இந்த நோயை அறிவதற்கு உதவுவது உண்ணிக்குடம்பி கடித்த இடத்தில் ஏற்படும் கறுப்பு நிறத்தழும்பு ஆகும். இது Eschar என ஆங்கிலத்தில் அழைக்கப்படுகின்றது. இது கமக்கட்டு, அரை போன்ற மறைவான பகுதிகளில் ஏற்படுகின்றது. (உண்ணி கடித்த இடத்தில்) இது அரிப்பு நோ என்பவற்றை ஏற்படுத்துவதில்லை.

எனவே காய்ச்சல் உள்ளவர்கள் தழும்பு உள்ளதா என அவதானித்து உங்கள் மருத்துவரிடம் தெரியப்படுத்துங்கள். இந்த Eschar உண்ணிக்காய்ச்சல் ஏற்படும் 60% நோயாளிகளிலேயே ஏற்படுகின்றது.

கடுமையான உண்ணிக் காய்ச்சலில் நுரையீரல் அழற்சி, மூளை அழற்சி, இருதய அழற்சி, சிறுநீரக அழற்சி, இரைப்பையிலிருந்து குறிதிப் பெருக்கு போன்ற அபாயகரமான நிலைகளை ஏற்படுத்தும்.

உண்ணிக்காய்ச்சல் ஒரு அபாயகரமான நோயாக இருந்த போதிலும் இதற்குச் சிறப்பான சிகிச்சையுள்ளது. Doxy cyclin எனப்படும் மருந்து இந்நோய்க்குச் சிகிச்சையளிப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. இந்த மருந்தை 12 வயதிற்கு உட்பட்ட சிறுவர்களுக்கும் கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் பயன்படுத்தக்கூடாது. இதற்குப் பதிலாக இவர்களுக்கு Azithromycin எனும் மருந்தைப் பயன்படுத்தலாம். இந்த நோயைக்கட்டுப்படுத்த தடுப்பூசி இல்லை. ஆனால் Doxycyclin களை ஒரு கிழமைக்கு ஒரு தடவை எடுப்பதன் மூலம் வராமல் தடுக்கலாம்.

இது தவிர முழு நீளக் காற்சட்டை, நீளக்கை சேட், பூட்ஸ் என்பவற்றை பற்றைகளிலும் புற்தரைகளிலும் வேலை செய்யும் போது பயன்படுத்தலாம். உண்ணிகளை விரட்டும் பூச்சுக்களை உடலில் தெரியும் பாகங்களில் பூசுவதன் மூலமும் பாதுகாத்துக் கொள்ளலாம். Permethrin, Citronella oil போன்றவை உதாரணங்களாகும்.

யாழ்ப்பாணத்தில் பரவலாகக் காணப்படும் உண்ணிக் காய்ச்சல் ஒரு அபாயகரமான நோயாகும். இது பற்றிய அறிவு நம் மத்தியில் குறைவாகக் காணப்படுகின்றது. எனவே இது பற்றிய விழிப்புணர்வு மக்கள் மத்தியல் ஏற்பட வேண்டும்.

Dr.S.கேதீஸ்வரன்
MBBS,MD,FCCP(cey)FACP (USA)
Fellowship in Diabetes mellitns
பொது மருத்துவ நிபுணர்
யாழ்.போதனா மருத்துவமனை.

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org